# செந்தமிழ்

தொகுதி - 76 ஜூன் 1982 பகுதி - 2

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

**தமிழ் இலக்கிய இதழ்**

ஆசிரியர் : டி.பி எம் பெரியசுவாமி

# செந்தமிழ்

தொகுதி - 76 ஜூன் 1982 பகுதி - 2

## உள்ளுரை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | புதிய குறள்<br>—கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் | ... 53 |
| 2. | இராணி மங்கம்மாளின் வாழ்க்கை வரலாறு<br>—கு. இராசாராம் M.A.M. Phil | ... 56 |
| 3. | இராமாயணக் கும்மி<br>டாக்டர் சுபாஷ் சந்திரபோஸ் | ... 62 |
| 4. | இலக்கியத் திறனாய்வு<br>—டாக்டர். வை. சச்சிதானந்தன் | ... 66 |
| 5. | இந்து சமய மாநாடும் இலங்கைப் பயணமும்<br>டாக்டர். சு. வேங்கடராமன் | ... 73 |
| 6. | இலக்கியத்தில் இமயமலை<br>கு. சதாசிவன், M.A.M. Phil | ... 84 |
| 7. | தமிழ்ச்சங்க வரலாறு<br>நூல் வெளியீடும் பாராட்டுக் கூட்டமும் | ... 89 |
| 8. | குயிலுக்கு அழைப்பு<br>—பழனி அரங்கசாமி | ... 92 |
| 9. | விவேகபோதினி இதழில் பாண்டித்துரையார் வரலாறு | ... 94 |

# புதிய குறள்

கவிராச பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர்
நாகர்கோவில்

**துறவறம்**

பிறவிக் கடற்குப் பெரும்புணை யென்ப
துறவிற் சிறந்த துறவு 29

**நீத்தார்**

யாத்தவர்க் கெல்லா மிடர்காண்டு மாகலின்
நீத்தலர்க் கில்லை நிகர் 30

**துறவியல்பு**

கொல்லாமை இன்னாக் குறித்த சிறப்பொழுக்கம்
எல்லாந் துறவுக் கியல்பு 31

**கொல்லாமை**

கொல்லாமை யென்றுங் குறிக்கொண்டு வாழ்வார்க்கு
வல்லாண்மை தானே வரும் 32

**அருளாட்சி**

பொருளுடையார்க் காகா புலனைந்துஞ் செற்ற
அருளுடையார்க் காகு மறம் 33

**புலாலுண்ணாமை**

நல்லாமை யானிங் குயிரிழப்ப ராயினும்
புல்லாமை வேண்டும் புலால் 34

**வெஃகாமை**

அஃகாமை யெல்லா மணிவந்து நிற்பினும்
வெஃகாமை யாரும் விறல் 35

**இரக்கமுடைமை**

மரக்கண் மரமனையர் மன்னு மகத்தின்
இரக்கமொன் றில்லா ரெனின் 36

**வலிமை**

வல்லாண்மை வாய்ப்ப வரினு மெனைத்தொன்றுஞ்
சொல்லாண்மைக் கில்லை துணை 37

### நிலையாமை

நிலையாமை நின்று நிலவிடக் கண்டீண்
டலையாமை வேண்டு மகம் 38

### பொருளறிவு

நெறிமூன்று மேவி நிலையும் பொருண்மேல்
அறிவூன்ற லாகு மறிவு 39

### மெய்யுணர்வு

பொய்யுணர் வெல்லாம் பொருளல்ல வாங்காலை
மெய்யுணர்வு தோன்றி விடும் 40

### தன்னையறிதல்

பின்னையறியப் பிறிதொன்று மில்லைமன்
தன்னை யறிந்தான் றனக்கு 41

### வீடுபேறு

தன்னைத் தலைவனைத் தற்பொருளைத் தானுணரிற்
பின்னை யிலதாம் பிறப்பு 42

### உள்ளொருக்கம்

*தன்னுடம்பு தோன்றாத் தகைத்தாகு முள்ளொருக்கம்
பின்னுடம்பு நீக்கும் பிரித்து 43

### பற்றறுதி

பற்றற் றவர்பற்றும் பற்றிலனைப் பற்றிடிற்
பற்றாது பற்றிடும் பற்று 44

## பொருட்பால்

### மன்னியல்

### படை

வெல்லும் படையில்லா வேந்தர்க்குத் தந்நாடுஞ்
செல்லும் படித்தன்று சேண் 45

### மக்கள்

மக்க ளொருப்பட்டு வாழாத நாடெல்லாம்
ஒக்க வழித லுடைத்து 46

### சூழ்வாரியல்பு

தழைவிருப்பா ரெல்லாந் தமக்குரிய ரேனும்
உழையிருப்பார் வேந்தர்க் குறவு 47

*தன்னுடம்பு என்பது சூக்கும சரீரத்தையும், பின்னுடம்பு என்பது தூல சரீரத்தையும் குறிக்கிறது எனலாம்.

### நட்பு

நட்டார் பலராயினாடாள் பவரைவழி
பட்டாங் கொழியும் பகை 48

### அரண்

முரணுடைமை யீண்டுமுழுது மிலதாம்
அரணுடைமை யில்லா தவர்க்கு 49

### உணவு

உண்ணத் தொலையா வுணவிலொரு நாட்டில்
எண்ணத் தொலையா திடர் 50

### செங்கோன்மை

அங்கோன்மை யெல்லா மழியு மறத்தியலுஞ்
செங்கோன்மை யில்லாத் திறத்து 51

### கொடுங்கோன்மை

கொடுங்கோன்மை நின்று குலவுமொரு நாட்டை
அடுங்கோன்மை மேவு மணித்து 52

## பொதுவியல்

### கல்வி

கல்வி யொருவர்க்குக் கைத்துணை யேனைய
செல்வ முதவாது சென்று 53

### கல்லாமை

புல்லாத கன்மரங்கள் போல்வர் பிறிதொன்றும்
அல்லாது கல்லா தவர் 54

### கேள்வி

ஆள்வினைக் கல்வியி னாய குறையெல்லாங்
கேள்வியிற் சென்று கெடும் 55

### அறிவு

அறிவை யறிவா லறியு மறிஞர்
அறிவதே யாகு மறிவு 56

### சொல்லாற்றல்

கற்றறிவு வேறு கடல்சூ ழுலகமிசைச்
சொற்றிறமை வேறு துணி 57

(தொடரும்)

# இராணி மங்கம்மாளின் வாழ்க்கை வரலாறு

பேராசிரியர் : கு. இராசாராம் M.A., M. Phil.,
வரலாற்றுத்துறைத் தலைவர்
அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

மதுரை அன்னை மீனாட்சியின் நகரம். முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் இம் மாநகரை ஆண்ட பெருமை இராணி மங்கம்மாளுக்கு உரியது. இன்னும் மங்கம்மாளின் நினைவாக பற்பல கட்டிடங்களும், மாளிகைகளும் மதுரையில்உள்ளன. மங்கம்மாளின் ஆட்சி திருச்சிராப்பள்ளி வரை நீடித்திருந்தது. திருச்சியில் மங்கம்மாளுக்கு இருந்த அரண்மனை மங்கல்மான் முறையில் கிழக்கு முகம் நோக்கிக் கட்டப்பட்டிருந்தது. திறன்வாய்ந்த கட்டிடக் கலைஞர்களால்அழகுற நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்த அரண்மனையை, மைசூரிலிருந்து வந்துதி ருச்சியைக் கைப்பற்றிய திப்பு சுல்தானோ, அதற்குப் பின்னர் வந்த நவாப் வமிசத்தினரோ ஒன்றும் செய்யவில்லை கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி பரவத் தொடங்கிய காலத்தில், ராபர்ட் கிளைவ் தலைமையில் வந்த பரங்கிப் படை ஒன்று அந்த அழகிய அரண்மனையைப் பீரங்கி வைத்துத் தகர்த்து விட்டது. மங்கம்மாளின் தர்பார்மண்டபம்மட்டும்எப்படியோதப்பி விட்டது. அதுவே திருச்சி டவுன் ஹால் என்று இப்போது அழைக்கப்படுகிறது. டவுன் ஹாலின் நூற்றாண்டு விழாக் கமிட்டியின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்ட இக்கட்டுரை ஆசிரியரின் அனுமதி பெற்று வெளியிடப்படுகிறது.]

கி.பி. 1336ல் நிறுவப்பெற்ற விசயநகர அரசு 1370ல் குமார கம்பணர் மதுரைசு ல்தானியத்தை வென்று அழித்தபிறகு விசயநகரப் பேரரசாகி, துங்கபத்திரை ஆற்றிலிருந்து குமரிமுனைவரை தனது ஆதிக்கத்தைப் பரப்பிற்று. மதுரையில் நிறுவப்பெற்ற நாயக்கர் ஆட்சி கி.பி. 1529-ல் விசுவநாத நாயக்கரால் தொடங்கப்பெற்று கி.பி. 1736-ல் இராணி மீனாட்சி ஆட்சியுடன் முடிவு பெற்றது. மதுரைப் பெருநாட்டை 207 ஆண்டுகள் 13 நாயக்க மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். மதுரைப் பெருநாடு என்பது அன்று மதுரை,

இராமநாதபுரம், திருநெல்வேலி, கேரளத்தின் ஒரு பகுதி, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் ஆகிய பகுதிகளைக் கொண்டது. நாயக்க அரசர்களுள் மிகுந்த புகழுடன் விளங்கியவர்கள் மூவராவர். நாயக்க அரசைத் தோற்றுவித்த விசுவநாத நாயக்கர், திருமலை நாயக்கர், இராணி மங்கம்மாள் ஆகியோரே அம்மூவர். காசியிலிருந்து கன்னியாகுமரி வரை கணக்கில்லாத அறச்செயல்களைப் புரிந்து கவின்புகழ் கொண்ட மங்கம்மாளின் வரலாற்றைத் தமிழ் மக்கள் அறிவது மிகவும் முக்கியமானதாகும்.

விசயநகர மரபில் கடைசி அரசராக ஸ்ரீரங்கராயர் சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தபோது, அம்மன்னர்களிடம் படைத்தலைவராகவும், அமைச்சராகவும் விளங்கிய தளவாய் இலிங்கம நாயக்கர் அவர்களின் அருமைத் திருமகளே நம் மங்கம்மாள். மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கர் [1659—62] மங்கம்மாளை மணந்தார். இவர்கள் இருவருக்கும் பிறந்தவர்தான் 1682 முதல் 1689 வரை மதுரை நாட்டை ஆண்ட ஸ்ரீரங்க கிருஷ்ண முத்துவீரப்பர். கணவனைத் தெய்வமாகக் கருதி ஒழுகிவந்த மங்கம்மாள், தன் மகனுக்காகவும், மதுரை நாட்டைக் காக்கும் பொருட்டும் உயிர் வாழ்ந்தாள். 1682 முதல் 1689 வரை தம் மகனுக்குப் பல வகைகளிலும் உதவி செய்தாள்.

1689-ல் தம் மகன் இறந்த பிறகு, தம் பேரன் விஜயரங்க சொக்கநாதனுக்குப் பட்டமீந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மங்கம்மாள், ஏறத்தாழப் பதினெட்டு ஆண்டுகள் திறமையாகவும், நேர்மையாகவும் ஆட்சி செய்து வந்தார்.

**மங்கம்மாள் ஓர் அறம் வளர்த்த நாயகி**

பாழடைந்த ஊர்களையெல்லாம் ஏட்டில் பதிவு செய்தார். எண்ணற்ற பொருளைச்செலவிட்டு அவ்வூர்களையெல்லாம் செம்மைப் படுத்தினார். மீண்டும் அழகு குடி கொண்டது. நாட்டைச் சுற்றி அடர்ந்துள்ள காடுகளை வெட்டி ஒழுங்குபடுத்தினார். வரப்பிட்டுக் கழனிகள் ஆக்கினார். கால்வாய்களை வெட்டி நீர்ப்பாசன வசதிகள் செய்தார். சில இடங்களில் ஆழமான கிணறுகளைத் தோண்டி உழவிற்குப் பயன்படச் செய்தார். சில ஊர்களில் பரந்த குளங்களை வெட்டுவித்துநீரைத்தேக்கினார். பாழ்பட்டுக் கிடந்த நிலங்களெல்லாம் அவற்றால் பசுமை தரும் வயல்களாயின. செந்நெல் வயல்கள்,

செழுங்கரும்புத்தோட்டங்கள், பழமரச் சோலைகள், பசும் புற்றரைகள் யாவும் மக்கள் உழைப்பால் மாட்சிமையுற்று விளங்கின. மக்கள் துன்பப்படாமல் சென்று வருவதற்குரிய சாலைகளையும் அமைத்தார். மதுரையில் இருந்து இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய சிறந்த ஸ்தலங்களுக்குப் போய் வர ஒழுங்கான பாதைகளை அமைத்தார். சாலைகளின் இருமருங்கும் புதிய மரங்களை வளர்த்து நிழல் கவியச் செய்தார். மக்கள் தங்கிச்செல்ல சத்திரங்கள் பல கட்டினார்.

''மங்கம்மாள் சாலை மலைமேலே
மதுரைக்குப் போகிற வழிமேலே'' என்ற முதுமொழி இன்றும் அம்மாதரசியின் புகழைப் பறைசாற்றி நிற்கிறது.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குத் தக்க திருப்பணிகள் செய்தார். வழிபட வரும் அன்பர்கள் எவ்விதத் தடையுமின்றி இறைவனை வழிபட்டு இன்புற்றுச் செல்லுமாறு வசதிகள் அமைத்துக் கொடுத்தாள். மீனாட்சி கோவில் அருகில் மதுரையில் ஓர் அரண்மனை கட்டினாள். மதுரையில் 'தமுக்கம்' என்று அழைக்கப்படும் 'கோடைக் கால கொழுநிழல் மனை' ஒன்றைக் கட்டினாள். மங்கம்மாள் சொக்கநாதர் வாழ்ந்த திருச்சிராப்பள்ளி அரண்மனையினுள் ஓர் அழகிய மண்டபம் ஒன்றை அமைத்தாள். அம்மண்டபத்தின்கண் அறிஞர்கள் பலரைக்கூடுமாறுசெய்து ஆராய்ச்சிப் பணியில்ஊக்கினார். அம்மண்டபத்திற்கு முதலில் வழங்கிய பெயர் 'பிரசங்க மண்டபம்' என்பதாம். பிறகு, 'நவாப் மண்டபம்'என அழைக்கப்பட்டது. இன்று மதுரையில் மதுரைக் கல்லூரி மேல்நிலைப் பள்ளியில் உள்ள அரண்மனை போன்ற கட்டிடமும், மதுரை அரசினர் மீனாட்சி கல்லூரியில் உள்ள கட்டிடமும், மதுரையில் முன்பு இருந்த இராமநாத புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகமும் இராணி மங்கம்மாள் கட்டிய கட்டிடங்களாகும். திருச்சியில் உள்ள கோட்டை தர்பார் மண்டபம், அதைச் சுற்றியுள்ள பிற கட்டிடங்கள், திருச்சி நகரைச் சுற்றியுள்ள நான்கு முக்கிய வாசல்கள் இவைகளையும், இன்னின்ன பல கட்டிடங்களையும் இராணி மங்கம்மாள் கட்டினாள்.

**மங்கம்மாளின் ஆட்சிச் சிறப்பு**

முகமதிய மன்னரோடு பகைமை பாராட்டாமலும், போர் புரியாமலும்நாட்டைஅமைதியுடன் ஆட்சிடரியக் கருதிஜில்பிர்கானுக்கு வேண்டும் பொருளீந்து சமாதானம் செய்து கொண்டார். இந்நிகழ்ச்சி

1693ல் நடைபெற்றது. 1697-இல் மீண்டும் ஜில்பிர்கான் வரவே இம்முறையும் பரிசுகள் பல நல்கி, தஞ்சையரசர் கைப்பற்றிக் கொண்ட தம் ஊர்கள் சிலவற்றை முகம்மதிய படை உதவியால் திரும்பப் பெற்றுக்கொண்டாள்.

தென்னாட்டின்ஒற்றுமைக்குலைவையும்தம் நாட்டின் அரசியல் நிலையையும் அறிந்து, போர் செய்யாமலேயே சமாதானத்தில் மங்கம்மாள் வெற்றி அடைந்தாள். தளபதி நரசப்பையா என்ற அஞ்சாநெஞ்சம்படைத்தவர்.போர்களிளெல்லாம்வெற்றி பெறுவதற்கு அரசியாருக்கு மிகுந்த துணையாக இருந்தார். திருவிதாங்கூர் போரில் அம்மையார் வெற்றி பெற்று இரவிவர்மனைக் கப்பம் கட்டும்படிச் செய்தார். 1700ஆம் ஆண்டில் தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர மன்னருடன் போர் செய்து வெற்றி பெற்றாள். 1695ல் மைசூர் படைகள் திருச்சியை முற்றுகையிட்டன. அந்த நேரத்தில் தஞ்சை மன்னரின் படை மைசூர் நாட்டைத் தாக்க, திருச்சியில் இருந்த படைகள் மைசூரை அடைந்தன. மங்கம்மாளுக்கு வந்த தீங்கு பகலவனைக் கண்ட பனிபோல் நீங்கியது. 1700-இல் தஞ்சை அரசரும், மங்கம்மாளும் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்ததால் இரண்டாம் மைசூர் படையெடுப்பு தவிர்க்கப்பட்டது. 1698ல் மதுரையைப் பிடித்திருந்த சேதுநாட்டு வீரர்களை வென்று மதுரையை மீண்டும் பெற்றுத் தம் நாட்டோடு தளவாய்நரசப்பையா சேர்த்தார்.ஆயினும்1702-இல் நடைபெற்ற போரில் தளவாய் நரசப்பையா கிழவன் சேதுபதியிடம் போரிட்டுப் போர்க்களத்தில் மாண்டார். 17.2-இல் கிழவன் சேதுபதி தனியாட்சி நிறுவினார். தளபதி நரசப்பையாவுக்குப் பின்னர்த் தளபதி அச்சையா என்பவர் இராணி மங்கம்மாளின் தளபதியானார்.

**இராணி மங்கம்மாளின் அருங்குணங்கள்**

அம்மையாரிடம் மிகவும்போற்றத்தக்க குணம் சமத்துவமாகும். எல்லாச் சமயங்களையும் ஒன்றுபோல் எண்ணி நன்மை புரிந்தாள். 1691-ல் மெல்லோ என்ற உரோமன் கத்தோலிக்கப் பாதிரியார் கிழவன் •சேதுபதியால் சிறை வைக்கப்பட்டு இறந்தார். மங்கம்மாள் சேதுபதிக்கு வேண்டுகோள் விடுத்தாள். ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயத்தைப் பரப்புவதற்கு உரிமை உண்டு; அதனால் ஒரு சமயம் மற்றொரு சமயத்தை அழித்துவிட முடியாது என்ற அறிவுரை தாங்கிய ஓலை வந்தது. பாதிரியாரை உடனே விடுவிக்க வேண்டும்

என்றும் அதில் கூறப்பட்டிருந்தது. சேதுபதியும் அவ்வேண்டுகோளுக் கிணங்க பாதிரியாரை விடுதலை செய்தார்.

டி பிரிட்டோ பாதிரியார் கிழவன் சேதுபதியால் கொல்லப் பட்டதை மங்கம்மாள் அறிந்தாள். அறியாமையால் நிகழ்ந்த கொடுமைக்கு மிகவும் வருந்தினாள். பூச்சே பாதிரியார் இராணி மங்கம்மாளைப் பார்க்க விரும்பினார். பாதிரியாரைப் பல்லக்கில் ஏற்றி ஊர்வலம் செய்து சிறப்பித்தாள். எம் மதத்தவரும் தம் உரிமையோடு வாழலாம் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தாள். 1692ம் ஆண்டில் எழுந்தசெப்புப் பட்டயத்தில் இசுலாமியர்கள் தொழுகின்ற மசூதிக்குத் தம் பேரன் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் பெயரால் இவள் பொருள் உதவி செய்ததைக் காணலாம். 1701-ல் திருச்சியின் பக்கத்திலேயேயுள்ள சில சிற்றூர்களை முகமதியர் தர்காவிற்கு நன்கொடை அளித்துள்ளமை அறியலாம். அதுதான் இன்றுள்ள 'நத்தர்சா தர்கா' என்பதாகும்.

1704-ல் சௌராஷ்டிரர்களுக்கு ஏற்பட்ட மனக்குறையைத் தீர்த்து அவர்களை இராணி மங்கம்மாள் மகிழ்வித்தாள். இராணி மங்கம்மாள் இறைவனை வணங்குவதுபோல் உள்ள சிலை ஒன்று திருப்பரங்குன்றம் கோவிலில் உள்ளது. அம்மையாரின் உருவம் ஒன்று மதுரைக் கோவிலின் பொற்றாமரைக் குளத்தின் சுற்றுப்புறத்திலுள்ள மண்டபத்தில் ஓவியமாகத் தீட்டப் பெற்றுள்ளது. அவ் வோவியத்தில் அமைச்சர் அச்சையாவும் பேரன் விஜயரங்க சொக்கநாதனும் உடனிருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

அரசி மங்கம்மாள் கட்டிய சத்திரங்களில் சோழவந்தானிலுள்ள சத்திரம் முக்கியமானதாகும். அரசியார் மீனாட்சி கோவிலில் ஊஞ்சல் மண்டபத்தைக் கட்டினாள். ஊஞ்சல் மண்டபத்தின் கிழக்கிலுள்ள கூரைப் பகுதியில் காணப்படும் வண்ண ஓவியங்கள் இவ்வரசி காலத்தில் தீட்டப்பட்டவையாகும். அம்மன் சன்னதி வாயிலிலுள்ள அஷ்டசக்தி மண்டபத்தின் எதிரிலுள்ள 'நகரா மண்டபம்' அரசி மங்கம்மாளின் அமைச்சரான அச்சையாவால் அமைக்கப்பட்டதாகும் கோவிலின் வழிபாட்டுக் காலங்களை மக்களுக்கு முரசில் தட்டி அறிவிப்பதற்காக இம் மண்டபம் அமைக்கப்பட்டது. இம் மண்டபத் தின் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு தூணின் அடிப்பகுதியிலுள்ள உருவம் அரசி மங்கம்மாளுடையது. திருமலை மன்னர் காலத்தில் நடைபெற்ற சித்திரைதிருவிழா, தைப்பூசத் திருவிழா, ஏனைய விழாக் கள் இவள் ஆட்சியில் மதுரையில் நடைபெற்றன.

மதுரை நாயக்க மன்னர்களில் விசுவநாத நாயக்கரும், திருமலை நாயக்கரும் தவிர மங்கம்மாளைப் போன்று மக்கள் நினைவில் என்றும் அழியாத இடத்தைப் பெற்றவர்கள் வேறு ஒருவரும் இல்லை. ஔவை யார், அறிவுத்தாய். கண்ணகி கற்புத்தாய். இராணி மங்கம்மாள் அறத்தாய். மௌரியப் பேரரசர் அசோகரைப் போல மங்கம்மாளும், அமைதிக்கால ஆட்சிச் சிறப்பினை உயர் நிலைக்குக் கொணர்ந்தாள். 55 ஆண்டுகள் வாழ்ந்து 1706 ஆம் ஆண்டில் எவ்வித இன்னலுமின்றி இறைவன் திருவடி எய்தினாள். இந்திய வரலாற்றில் இத்தகு சிறப்புப்பெற்ற பெண்ணரசியைக் காணமுடியாது. 'நாயக்க மாதேவி'' இறந்த அன்று அறம் வளர்த்த அன்னை அகன்றுவிட்டனரே என மக்கள் கதறி அழுதனர். மங்கம்மாள் செய்த அறப் பணிகள் காலத்தால் அழியாதவை.

**மானுட வாழ்வில் இறப்பு**

—ஒரு விளக்கம்

இறப்பு என்பது உலக வாழ்க்கையின் இறுதிக் கட்டம். ஆனால் இறவாத வாழ்வெனும் வீடுபேற்றுக்கு அது ஒரு வாயிற்படி. உலக வாழ்வுக்குப் பின்னர் ஏது விளையுமோ என்று அஞ்சுவோரே மரணத்துக்கும் அஞ்சுகின்றனர். அழியும் உடம்பை ஆண்டவனுக்கு அர்ப்பணிப்பதுவே இறப்பு. உடம்பு தான் அழியும். ஆன்மா அழிவதில்லை. எல்லா மதங்களும் இதைத்தான் கூறுகின்றன. இறப்பினைப் பற்றிய இவ் உண்மை தெரிந்தால், யாரும் அதனைப்பற்றி அஞ்ச மாட்டார்கள்.

—அன்னை தெரசா

# இராமாயணக் கும்மி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

—டாக்டர் சுபாஷ் சந்திரபோஸ் M.A.,M.''hil.,

### திருமால் சிவனிடம் வருதல்

சொன்ன தறிந்துமே மாதவனு மிகத்
  தூய கெருடனுர் தோளினிலே
தன்னிரு பாதமும் வைத்துமே தானிவர்
  தானுமெழுந்துமே நேரே வந்தார்
வந்திடும் போதே பரமசிவன் மிக
  வள்ளலைக் கண்டே மலர்ந் தெழுந்தார்
இந்திரரோடு மிமையவரும் விதி
  யென்பவனும் பணிந்தேற்றி விட்டார் 22

### சிவன் கூறல்

ஏத்திய தேவர்க ளெல்லவரும் அயன்
  ஈசுர மாதவ னென்பவரும்
மாத்தமும் பேசவே கூடியே தானொரு
  மண்டபந் தன்னில் வந்திருந்தார்
செப்பி னுரைப்போ சிவனுமே தானந்த
  செங்கண் மாலாகிய தேவனுக்கு
இப்பவுமாலே இராவண னுலிவர்
  ஈடழிந்திட்டா ரிமையவரும் 23

இவ்வகைக் கென்னது தந்திரனே யிதுக்கு
  எவ்வகை யாமது அந்தரனே
அவ்வகைத் துன்ப மறுத்துமே தானவர்
  ஆபத்தைத் தீர்த்தே யனுப்பு மென்றுர்

### திருமால் முதலானோர் கூறல்

சொல்லு வாரப்போது மாதவனும் மிக
  சூட்ச முபாயங்கள் சூதுமே தான்
வல்லப மானது தானறிந்தே திருமாலுமே
  சொல்வார் வகையுமே தான் 24

ராவணன் செய்ததவம் பெரிது மிக
நாளுமே கொள்வது நாமரிது
சிவனு மொன்றினுல்ச் சாவதில்லே யென்று
செப்பியே கேட்டானே தேவரையும்
தாளிடு வாழ்க்கையு மானவனே யிப்போ
தானுமே கொல்லவும் தக்கதுக்கே
மானிட ரூப மெடுத்துமே தானவன்
மாளவும் வேணும் வகையுமென்றுர் 25

சேம தசரத பூமனுக்கே யிப்போ
சென்று பிறப்பனே செல்வனுமாய்
ராமனு மாகவே வந்திடுவேன் மிக
நாடுவன் சேஷ னிலக்கணனுய்
சங்குமே சக்கர மற்றிருவர்
தானும் பரதனுஞ் சத்துருக்கன்
அங்குமே வந்து பிறந்திடுவோம்
வகையானதுக் கங்குமே நீங்களுந்தான் 26

வந்திட வேணும் வகைப்படியே யங்கே
வாரதுமென்ன வகையுமே தான்
எந்தனுக் கேற்கவே சொல்லுமென்று ரிவர்
ஈசனு முன்பு இவர்க்குரைப்பார்
காயுங்கனல்க் கண்ணுடையவருந் தேவர்
கண்டிடச் சொல்வார் கருணையொடு
வாயுவின் மைந்தனுமாகவே தானாமும்
வாறே மனுமனுமாக வென்றுர் 27

அன்னமு மேறிய விர்மனுமே சுயமாகவே
சொல்வன வனுமே தான்
தன்னேயு மிஞ்சியே வந்திடுவே னிப்போ
சாம்புவ னுகவும் தானுமென்றுர்
இந்திர னுனவன் என்ன சொல்வான்வகை
இப்போ துனக்கு மியம்பிடு வேன்
மந்தியுமாகிய வாலியுமா யிப்போ வாறது
மென்றுமே வார்த்தை சொன்னுன் 28

அக்கினி நீலனுமாவே னென்று னள
ஞனவன் காமனே யாதுமென்றுன்
சுக்ரீப ஞனவன் சூரியனு மென்று
சொன்னபின் தேவர் தொகுப்புடனே
வானர மாகவே வாரதெனு மிந்த
வார்த்தைக ளெல்லாம் வகைமுடித்து
தானது கற்பினே பண்ணிவைத்தே மிகத்
தானெழுந் திட்டதோர் தானதையும் 29

### வதிஷ்டரின் மகிழ்ச்சி

கண்டறிந்தானே வதிஷ்ட குரு இது
கைகண்ட தென்றுக் கருத்தினிலே
அண்டர் பிரானையும் ஆதரித்தே யவர்க்
காதிக்க மிட்டவன் கிட்ட வந்தான்

### தசரதன் வதிஷ்டர் உரையாடல்

ராசனு மப்போ யெழுந்திருந்தே வந்த
நாம மறையோனே நமஸ்கரித்தே
[யோசனே யின்றல்லோ சொல்வ தென்றீரதுக்
குண்மையுமேது மென்றே யுணர்ந்தானி 30

வெத்தியுடைய தசரதனே யினி
மேலொரு காரியமென்ன வென்றுல்
புத்திர காமேஷ்டி யாகமு மேநீயும்
போதவுஞ் செய்திட வேணுமென்றுர்
காட்டுமையா வகை யாகத்துக்கே செய்யுங்
காரியங் கற்பினே தன்னே யென்றுர்
சூட்டுஞ் சடாமுனி கோட்டுரிஷி யந்த
துய்யவர் வந்திட வேணுமென்றுர் 31

எங்கிருப்பார் கலேக் கோட்டுரிஷி
யதுக் கெத்தன மெப்படி யென்றவுடன்]
பங்கை யருந்ததி தன்கணவ னந்த
மன்னனுடனே மகிழ்ந் துரைப்பான்

[ ] இவ்வடைப்புக் குறியிலுள்ள வரிகள் வன்னிப்பட்டு சுவடியில் இல்லை; கக்கரை சுவடியில் உள்ளன.

உத்தம தேசத்தி லுள்ளவர்தாம் நாமும்
உத்தமன் பெத்ததோ ராமபதன்
சத்திய வாசக முள்ளவன்தான் அவன்
தானு மரசாளும் தன்பதியில் 32

வான மழைகளும் தான்விலகி யவன்
தானும் மனங்கள் புண்ணுகியேதான்
ஞான மறிந்தோர் பூசுரரே யிதுக்
கான விதமென்ன சொல்லுமென்றுன்
வேதிய ரென்பவ ரேது சொல்வார் மிக
வேந்தனே கேளும் விஷ்தாரமதாய்
[ஆதிமுனி கலைக் கோட்டுரிஷி யவ
ரையர் வந்தால்மழை பெய்யுமென்றுர் 33

## இறைவனைக் காணுதற்குரிய வழி

மனிதன் தீய செயலைச் செய்தால், அதுவே பாவம். மனம்போன போக்கெல்லாம் போய்க் கொண்டிருந்தால், மனிதன் தீய செயலைத்தான் செய்வான். எனவே மனதைக் கட்டுப்படுத்த வேண்டும். கட்டுப்படாத மனதில் இறைவன் நிலைப்பதில்லை. உள்ளத்தால் எண்ணும் தீமையும், நாவினால் பேசும் பொய்யும் இறைவனை நம்மிடமிருந்து பிரிக்கும் தடைக்கற்களாகும். ஏழ்மையினையும் எளிமையினையும் கைக்கொண்டால், பற்றற்ற நிலை ஏற்படும். அந்தப் பற்றற்ற தூய்மையான நிலைமையே ஆண்டவனைக் காணுதற்குரிய வழியாகும்.

# இலக்கியத் திறனாய்வு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி) —ஓர் அறிமுகம்

டாக்டர் வை. சச்சிதானந்தன்

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

வரையறுத்தலும் சட்டமியற்றலும் போன்று திறனாய்விற்கு வேறுசில கொள்கைகளும் உண்டு என்று கருத்து பல நூற்றாண்டு-களாக நிலவி வருகிறது. திறனாய்வு, எழுத்தாளர்களுக்கும் மக்க-ளுக்கும் தொண்டு செய்யப் பிறந்தது என்பது, அக் கொள்கைகளுள் ஒன்று. ஹோரஸ், பிரெஞ்சு நாட்டு ப்வொலோ (*Boileau*), ஆங்கில நாட்டு போப் (*Pope*) போன்றவர்கள் திறனாய்வாளர்களின் அறிவுரைக்கு எழுத்தாளர்கள், செவிசாய்க்க வேண்டும் என்ற குறுகிய நோக்கை வற்புறுத்தினர். சான்போவ் (*Sainte-Beuve*) என்ற புகழ் பெற்ற பிரெஞ்சுக்காரர்—மாத்யூ ஆர்னல்டின் வழிகாட்டி—மக்களின் மதிப்புரை ஒரு நூலாசிரியன் அவனைப் புரிந்து கொள்ள உதவ-வேண்டும் என்ற விரிந்த மனப்பாங்கை உடையவர். ஆர்னல்ட், சிறந்த திறனாய்வு முயற்சிகள், பலவித சீரிய எழுத்துப் படைப்பு-களுக்கும் வழிவகுக்கும் என்ற கருத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவர். இந்தஇரண்டு அறிஞர்களின் கருத்துக்களை கொள்கை-களாக மாற்றுவது கடினம். மக்களின் மதிப்பீடு ஒரு கவிஞன் தன்னை உணர உதவியாக இருக்கலாம். அந்த உணர்வு மக்களுடைய ஆதரவிலிருந்தும், எதிர்ப்பிலிருந்தும் கூடத் தோன்றலாம். ஆனால் எல்லாக் கவிஞர்களும் இத்தகைய உதவியை நாடுவதில்லை. திற-னாய்வும் படைப்பும் ஒன்றையொன்று பாதிக்கும் வல்லமையுடையன. பெரிய படைப்புகள் சீரிய திறனாய்வு முயற்சியில் வரவேண்டுமென்பது கடந்த காலத்திற்கு ஒவ்வாது. முதல் எலிசபெத் ராணி காலத்தில் திறனாய்வின் ஆதரவின்றியே சிறந்த நாடகங்களும் கவிதைகளும் தோன்றின. தமிழ் மறுமலர்ச்சியையும் இக்கருத்தை வலியுறுத்து-வதற்கு ஒரு சான்றாகக் காட்டலாம்.

திறனாய்வு எப்படி மக்களுக்குத் தொண்டு செய்கிறது? திற-னாய்வாளன் தனிக்கட்டுரைகள் மூலமும் நாடேடுகளின் வாயிலாகவும் இன்ன நூல்களைத் தான் படிக்கலாம், இன்ன நூல்களைப் படிக்கக் கூடாது என்று வாசகர்களுக்கு அறிவுரை கூறும்பொழுது அது ஒரு தொண்டாகிறது. ஆனால் இது ஆபத்து நிறைந்த கைங்கரியம். திறனாய்வாளன் தன்னுடைய விருப்பு வெறுப்புக்களை கொள்கை-களாக மாற்றி மக்களுக்கு தாராளமாகப் பரிமாற முற்படுகிறான்.

குறிப்பாக, நம் நாட்டில் பத்திரிகைத் திறனாய்வு (*Journalistic criticism or literary journalism*) திறனாய்வுக் கலைக் கேசாபக்கேடாக ஆகிவிட்டது. ஆங்கில நாட்டு அறிஞரும் எழுத்தாளருமான டோரதி எல். சேயர்ஸ் (*Dorothy L Sayers*) 'பத்திரிகை உலகம் எவ்வளவு சுதந்திரமானது?' (*How Free is the Press*) என்ற புகழ் பெற்ற கட்டுரையில் கூறியது போல, எந்தப் பத் திரிகையும் மக்களின் எண்ணங்களை உண்மையாகப் பிரதிபலிப்பதில்லை. அது ஒரு தனி மனிதன் விருப்பு வெறுப்புக்களையோ அல்லது ஒரு சிறிய அல்லது பெரிய வர்க்கத்தின் அபிலாஷைகளையோ செய்திகளாகத் தருகிறது. மக்களை ஏமாற்றி அவர்களுடைய இலக்கியச் சுவையை திசைதிருப்பி விடுவதற்கு ஒருஎடுத்துக்காட்டு: மதத்தையும் மதக்கொள்கைகளையும் போற்றுபவன் கலைஞன்; அவற்றை எதிர்த்துப் பாடுபவன் கொலைஞன். இரண்டாவது கருத்து ஒரு சொம்பு பாலில் ஒரு துளி நஞ்சைக் கலந்து கொடுப்பது போல மறைமுகமாக செய்திகள் மூலமாகவும் தலையங்கங்கள் மூலமாகவும் பரப்பப்படுகின்றது. எது சிறந்தது, இசைவுக்கவிதையா (*poetry of affirmation*)? அல்லது எதிர்ப்புக் கவிதையா (*poetry of revolt*)? அவைகள் எதிர்மறையா-னவையா அல்லது அவற்றுக்குள் ஏதாவது ஒற்றுமை காணமுடியுமா என்ற கேள்விகளுக்கு பதில் காண்பவன் உண்மையான அறிஞன். அத்தகைய கேள்விகளை அரசியலாக மாற்றுபவன் பத்திரிகையாளன். இலக்கியத்திற்கு எதிரான சதியில் இவ்வாறு தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்பொழுது பத்திரிகையாளனும் ஒரு அரசியல் வாதியாகிறான். தரமான திறனாய்வில் மட்டமான அரசியலுக்கு இடமில்லை.

நல்ல அறிவுடைய திறனாய்வாளர்களும்கூட படிப்பதற்கு எது நல்லது எது கெட்டது என்ற பாகுபாட்டைச் செய்யும் பொழுது தவறிவிடுகிறார்கள். பெரும் திறனாய்வாளரான ஆர்னல் டிற்கு ஷெல்லியின் சொந்த வாழ்க்கையும் டென்னிசனின் (*Tennyson*) கவிதை எழுதும் பாங்கும் பிடிக்கவில்லையாதலால் அவர்களைக் குறைகூறுகிறான். அந்தக் குறைகூறல்கூட அழகான கற்பனை வளம் பொருந்திய மொழியில் வெளிப்பாடு செய்யப் படுகிறது; ஷெல்லியை ('*an ineffectual angel beating in the void his luminous wings in vain*'' (சூனிய வெளியில் தன்னுடைய ஒளிவிடும் இறக்கைகளை-யடித்து பறக்கமுடியாமல் தவிக்கும் பயனற்ற தேவதூதன்) என்று வர்ணிக்கிறான். இச்சொற்கள் நம்மை நாம் ஆர்னல்டிடம் வெறுப்புக்

கொள்ளச் செய்யாது என்று நினைக்கிறேன். வெறுப்பு கூட புன்சிரிப்பாக மாறும். இதுதான் அரசியலுக்கும் திறனாய்விற்கும் உள்ள வேறுபாடு.

இத்தகைய ஆபத்துக்கள் நம்முடைய மனதைவிட்டு எளிதில் விலகாவிட்டாலும், நல்ல திறனாய்வு மக்களுக்குச் சிறந்த தொண்டு செய்யக் கூடும் என்ற கருத்தை சான் பொவும் அவருடைய சீடரான ஆர்னல்டும் மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறார்கள். நன்னடக்கை முறையை வலியுறுத்தியும், மனதைக் கெடுக்காத இலக்கியச்சுவைகளை ஊட்டியும், இலக்கியத்திலுள்ள சிறந்த மரபுப் பண்புகளில் மக்களின் கவனத்தை ஈர்த்தும், சமூகத்தின் மனநிலையை உயர்த்-தலாம் என்று இந்த பிரெஞ்சு அறிஞரும், இலக்கியத்தில் சிறந்தவைகள் என்று பலநூற்றாண்டுகளாகத் தெரிந்து போற்றப்பட்டவைகளை மதத்தைப் பரப்புவதுபோல் மக்களிடையே திறனாய்வு பரப்பவேண்டும் என்று இந்த ஆங்கில அறிஞரும் கூறியவை புகழ் பெற்ற கூற்றுகள். இந்த நூற்றாண்டின் சிறந்த ஆங்கிலக் கவிஞர்களில் ஒருவரான டபிள்யூ, எச். ஆடின் (*W. H. Auden*) தனக்கே உரிய பாணியில் திறனாய்வுத் தொண்டைப்பற்றிக் கூறியதாவது: திறனாய்வாளனின் கடமைகளாவன: பழைய பண்பாடுகளைப் பற்றிய அறிவை மக்களிடையே பரப்புவது; மனிதவாழ்க்கையிலுள்ள ஒற்றுமையை வாசகர்களுக்குத் தெரிவிப்பது; தான் ஆராயும் ஒரு இலக்கிய நூலுக்கும் தன்னுடைய சொந்த அனுபவத்திற்கும் உள்ள பொருத்தத்தைப்படிப்பவர்களுக்குவிளக்குவது; இலக்கியக்கலக்குரிய பெருமதிப்பு (*values*) களுக்கும் மற்ற கலைகளுக்குரிய பெருமதிப்புகளுக்கும் உள்ள தொடர்பை நிலைநிறுத்துவது ஆகியவை.

திறனாய்வுக் கலையின் வளர்ச்சியைப் பற்றி இதுவரையில் நாம் விவாதித்த கருத்துக்களின் மூலம் நாம் இப்பொழுது இருப-தாவது நூற்றாண்டுக்கு வந்துவிட்டோம். இந்நூற்றாண்டு திறனா-ய்வுத் திறனின் ஒப்பற்ற காலம் என்ற கூற்றிலுள்ள உண்மையை ஒப்புக் கொள்ளும் பொழுது வேறுசில கசப்பான உண்மைகளை மறக்க முடியாது. இந்த நூற்றாண்டைப்போல் கலைஞனையும், கலையையும் கலைப்படைப்புக்களையும் அலசி ஆராய்ந்த காலமே வரலாற்றில் கிடையாது. அதேசமயத்தில் இந்நூற்றாண்டைப்போல அறிவுக்குழப்பத்தை (*intellectual confusion*) உண்டாக்கிய காலமும் சரித்திரத்தில் இல்லை. இதற்குக் காரணம் கணக்கற்ற திறனாய்-

வாளர்களும், திறனாய்வுக் கொள்கைகளும் திறனாய்வு நடைமுறைகளுமே ஆகும். மேலும் கடந்த நூற்றாண்டுகளில் ஜான்ஸனைப் போன்றோர் ஆர்னல்டைப் போன்றோர், தோன்றிய பெரிய அறிஞர்களின் கூற்றுக்களை ஒரு சமூகமே ஒப்புக்கொள்ளும் அளவிற்கு அவர்களுக்கு மதிப்பு இருந்தது. இந்நூற்றாண்டில் ரிச்சர்ட்ஸ், எலியட் போன்ற சிறந்த திறனாய்வாளர்கள் தோன்றி தங்களுடைய சிந்தனைகளின் மூலம் 'திறனாய்வுக் கொள்கைகள் விளைவித்த பெருங் குழப்பத்தை (*chaos of critical Theories*) போக்கி, திறனாய்வுக் சலை இல்லாமல் இலக்கியத்தை வளர்ப்பதோ அல்லது நுகர்வதோ இயலாது என்ற உண்மையை உறுதிப் படுத்தினாலும், அவர்களைத் தீர்க்கதரிசிகள் என்றோ மகான்கள் என்றோ எந்த திறனாய்வாளனும் ஒப்புக்கொள்ள முன் வரவில்லை. தற்காலத்தில் மிகவும் மதிக்கப்படும் அறிவுச்சுதந்திரம் (*intellectual freed m*) காரணமாக; எப்பொழுதும் போல் நம் நாடு இதற்கு ஒரு விதிவிலக்கு திறனாய்வில் பெரும் தலைகளைச் சிறுபுள்ளிகள் கூட உருட்டி விளையாடுவது சர்வ சாதாரணமாகிவிட்டது. புதுப் புது திறனாய்வாளர்களும் குழுக்களும் அடிக்கடி தோன்றிப் புதுப்புதுக் கொள்கைகளை சமய உரைபோல் பரப்ப தொடங்கினார்கள். இதற்கு ஒரு காரணம், குறுகிய காலங்களில் இலக்கியப் புரட்சிகளும் இயக்கங்களும் தோன்றியதே. இன்னொரு காரணம் பலவிதமான கருத்துக்களையும் வெளியிடுவதற்கு முன் வந்த ஏராளமான இலக்கிய இதழ்கள். ஒரு குறிப்பிட்ட பத்து ஆண்டுகளில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் வெளியான ஆய்வு நூல்களையும் கட்டுரைகளையும் படித்து இன்புறுவதற்கு ஒருவனது சராசரி ஆயுட்காலம் போதாதென்றே கூறலாம். இருபதாம் நூற்றாண்டின் திறனாய்வு வளர்ச்சி இவ்வளவு அச்சுறுத்தும் சிறப்புக் கூறுகளை உடையதாக இருந்தாலும், ஒரிரு அடிப்படைக் கொள்கைகளைத் தனிப்படுத்தி அவைகளை ஆராய்வதின்மூலம் இக்காலத்துத் திறனாய்வு வளர்ச்சியைக் கோடிட்டுக் காட்டலாம்.

இருபதாம் நூற்றாண்டில் திறனாய்வு வளர்ச்சியின் முக்கியகட்டம் முதல் உலகப் போருக்குப் பிறகு துவங்கியது என்று சொல்வோமானால் அது புதிய திறனாய்வின் (*New Criticism*) பிறப்பையும் அதன் பெரும் தாக்கத்தையும் குறிக்கும். இது இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உருவெடுத்தது. இதன் தத்துவத்தின்படி, திறனாய்வு செய்யும் தகுதிக்குரியது ஒரு நூலின் மூலபாடமே (*text*). இதை இயற்றியவன் நூலாசிரியனே தவிர அவனுக்குப் பின்னால் மறைந்திருக்கும் தனிமனிதனல்ல. ஆகையினால்

நூலாசிரியனுடைய வாழ்க்கை அவன் வாழ்ந்த, சூழ்நிலை ஆகிய வற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவனுடைய நூலின் மூலபாடத்தை மூலபாடமாகவே ஆய்ந்து உணரவேண்டும். அதாவது அது அவனுடைய கற்பனையிலிருந்து தோன்றுவது சொந்த வாழ்க்கையிலிருந்தல்ல. அதனுடைய இந்த முருகுத்தனிநிலை (*antotelic*) காரணமாக மூலபாடத்தை சொற்கள், உருவகம், அடிக் கருத்து (*theme*) ஆகியவைகளின் சேர்க்கையால் நுண்ணிய முறையில் பின்னப்பட்ட கட்டமைப்பு (*internal structure*) என்று கொண்டு அதனை முருகியல் முறையில் ஆய்ந்து அனுபவிக்க வேண்டும் என்ற கொள்கை உருவெடுத்து ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் திறனாய்வு உலகத்தை ஆட்கொண்டது. அதன் காரணமாக, விஞ்ஞான உத்திகளைக் கையாண்டு புதிய திறனாய்வாளர்கள் புள்ளிவிவரங்கள், வரை கட்டங்கள், கோணங்கள் ஆகியவை மூலமாக சொற்களும், ஒலிகளும், உவமைகளும் எப்படி வடிவம் (*pattern*) கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று ஆராயத் தலைப்பட்டனர். இத்தகைய திறனாய்விற்கு எடுத்துக் காட்டு 1935ல் வெளியான கார்லைன் ஸ்பர்ஜனின் (*Carline Spurgeon*) 'ஷேக்ஸ்பியரின் உருவக முறை' (*Shakespeare's Imagery*). புள்ளிவிவர முறையைத் தவிர்த்து நூலாசிரியனின் சொல்வன்மையிலும் உருவகத் திறனிலும் கற்பனை வளத்தைக்கண்டு உய்த்து, இலக்கியம் என்பது ஒரு சிக்கலான இயல் என மெய்ப்பித்தவர்கள் ஜான்க்ரோ ரான்ஸம் (*John Crowe Ransom*), கிளியான்த் புருக்ஸ் (*Cleanth Brooks*), ஆர், பி. ப்ளாக்மர் (*R. P. Blackmur*) போன்ற நுண்ணிய அறிவுடைய அமெரிக்கத் திறனாய்வாளர்கள். புதிய திறனாய்வாளர்கள் எல்லாம் அவர்களுடைய குறுகிய நோக்குடைய கொள்கைகள் கவிதைகளுக்கு, முக்கியமாக தன்னுணர்ச்சிப் பாடல்களுக்குப் பொருந்தியமையால், கவிதைகளையும் கவிதை-நாடகங்களையும் தங்களுடைய ஆய்வுப் பொருளாகத் தேர்ந்தெடுத்தார்கள். இம்முறையிலுள்ள பெருங்குறை: மக்கள் இனம் (*race*), சூழ்நிலை (*milieu*), மனிதன் (*man*) ஆகியவற்றின் தாக்கத்திற்கு பெரும்பாலான இலக்கியப்படைப்புக்கள் உட்பட்டவை என்ற பெரிய உண்மையை மறந்து, ஒரு நூலைவெறும் நூலாக புதிய திறனாய்வு மதிப்பீடு செய்கிறது. இதனுடைய சிறந்த பங்கு: ஒரு நூலின் மூலபாடத்தைக் கட்டுப்பாட்டுடனும் நுண்ணிய முறையிலும் எப்படிப் பாகுபாடு செய்வது என்பதை இற்றைய திறனாய்வாளர்களுக்குக் கற்றுக் கொடுத்தது. இந்த அணுகுமுறையைப் பின்பற்றாத இலக்கிய அறிஞர்களே இன்று இல்லை என்று கூறலாம்.

வாழ்க்கை வரலாற்று முறையிலும் சரித்திர வரலாற்று முறையிலும் நூல்களை உய்த்துணர்வதை எதிர்த்து முருகியல் முறையையே புதுத்திறனாய்வு பரிந்துரை செய்தது. புதுத் திறனாய்வுக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் முருகியல் முறை மட்டும் ஒரு நூலை முற்றும் கற்றுணர உதவாது; நாம் மூலபாடத்திற்கு அப்பாற் சென்று எழுத்தாளனை ஆட்டிப்படைத்த அல்லது தூண்டிவிட்ட உட்சக்திகளையும் வெளிச்சக்திகளையும் தெரிந்தறிந்து அவைகள் எப்படி ஒரு நூலை உருவாக்கின என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். இதன்பலனாக பலவித இலக்கியத் திறனாய்வு நோக்குகள் உருவாக்கப்பட்டன. வாழ்க்கை வரலாறு, சரித்திர வரலாறு, மனஇயல், சமூகவியல் சமயம், நன்னடக்கை, மொழியியல், படிமஇயல், கட்டமைப்பியல் (*structuralism*) முதலிய கலைகளின் நோக்கில் இலக்கியமும் இலக்கிய நூல்களும் ஆராயப்பட்டன. நேரமின்மையின் காரணமாக இந்நோக்குகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க நான் முற்படவில்லை. மேலெழுந்தவாரியாக நோக்குவோமானால், இந்த அணுகு முறைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகத் தோன்றலாம். ஆனால் அவை வெளிப்படுத்தும் அடிப்படை உண்மைகள் இலக்கியத்தின் சிக்கலான தன்மையை ஒன்றுகூடிப் பறைசாற்றுகின்றன. இன்றைய திறனாய்வு கையாளும் பலமுறைகளும் கூட்டு மொத்தத்தில் இலக்கியத் தன்மை என்றால் என்ன என்பதை அறிவுறுத்துகின்றன. ஒரு நூலின் கட்டுக்கோப்புக்குள் அடங்கிய செய்திகள் உள்மூலத்திலிருந்தோ (*internal source*) வெளிமூலத்திலிருந்தோ (*external source*) தோன்றினாலும், அவை எழுத்தாளனின் கற்பனையின் தாக்கத்தினால் உருமாறி நூலில் பொருந்தி விடுவதால், எழுத்துப் படைப்பு என்பது அதனுடைய பெரிய, சிறிய பிரிவுகளின் கூட்டு மொத்தத்தை விட மிகுதியானது. அதைப் பகுத்தறிவை மட்டும் கொண்டோ அல்லது விஞ்ஞான முறையை மட்டும் கொண்டோ மதிப்பிட்டுவிட முடியாது. அதில் பகுத்தறிவுக்கு மாறான (*irrational*) அல்லது நம்மால் முன்னறியக்கூடாத (*unpredictable*) தனிப்பொருள் (*element*) நூலின் தனித்தன்மையையே நிச்சயிக்கலாம். இத்தனித்தன்மைதான் இலக்கிய நூலை மற்றகலைகளைச் சார்ந்த நூல்களிலிருந்து பிரித்துக் காட்டுகின்றது. மேலும், ஒரு எழுத்தாளனுடைய சிக்கலான ஆளுமையை அறிவதற்கு அவனால் எழுதப்பட்ட எல்லாவித நூல்கள், கட்டுரைகள் மட்டுமல்லாது அவனுடைய கடிதங்கள்கூட ஒரு படிவத்துள் கொண்டுவரப்பட வேண்டும். இக்கொள்கையின் காரணமாக,

அவனுடைய எழுத்துக்களெல்லாம் பிரித்துப் பிரித்து ஒன்றிற்கொன்று தொடர்பில்லாமல் ஆராயப்படாமல் அவையெல்லாம் ஒரு உயிருக்குள்ள ஒற்றுமையைப் (*organic unity*) போன்ற முழுநிலைத் தன்மையைக் காட்டுகின்றன என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப் படவேண்டும். சான்றாக, பாரதியை ஒரு கவிஞன் என்று மட்டும் எண்ணாமல் அவனுடைய கவிதைகள், கதைகள், கட்டுரைகள் (ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்டவை), உரைகள், மொழிபெயர்ப்புகள், கடிதங்கள் எல்லாம் ஒரு உடலினுடைய, பல உறுப்புக்களைப் போன்று ஒரு உள் ஒற்றுமை (*inner unity*) யைக் கொண்டுள்ளன என்ற நோக்கில் திறனாய்வு செய்யப்பட்டு அவனுடைய ஆளுமையை நாம் புரிந்துகொள்ள முற்பட வேண்டும். இதை நாம் பாரதி நூற்றாண்டு காலத்திலாவது செய்து காட்டுவோமானால் தமிழ் திறனாய்வுலகம் மேலைநாட்டுத் திறனாய்வைப்போல அறிவு முதிர்ச்சி அடைந்துவிட்டது என்பதை மெய்ப்பித்துக் காண்பிக்கலாம். நாம் இதைச் செய்வோமா? அல்லது பாரதிவிழாவைப் பட்டி தொட்டிகளிலெல்லாம் ஒவ்வொரு நாளும் கொண்டாடி நம்முடைய அறிவாற்றலை வீணாக்குவோமா? என்ற கேள்வியுடன் இந்தக் கட்டுரையை முடிக்கிறேன்.

# இந்து சமய மாநாடும் இலங்கைப் பயணமும்

டாக்டர் சு. வேங்கடராமன்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

இந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 முதல் 25 முடிய அகில உலக இந்து மகாநாடு இலங்கையில் நடைபெற முன்னேற்பாடுகள் நடந்தன. இந்த மாநாடு முதன் முதலாக உலக அளவில் கூட்டப் படுவதாகும். இலங்கை அரசின் பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, இந்து கலாச்சார, தமிழ் அலுவல்கள் அமைச்சு இந்தமாநாட்டை நடத்-தத் திட்டமிட்டது. அதன் அமைச்சர் கௌரவ செ. இராசதுரை கடந்த ஓராண்டாகவே இதற்கான ஏற்பாடுகளைக் கவனித்து வந்-தார். இந்த மாநாட்டில் பேராளராகக் கலந்து கொண்டு ஆய்வரங்-கில் கட்டுரை படிக்குமாறு வந்த அழைப்பினை ஏற்று **வைணவக் கோயிற் கலை** என்ற தலைப்பில் கட்டுரை அனுப்பினேன். ஈழம் செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்தேன்.

## பயணம்

முன்னதாகவே திட்டமிட்டவாறு, மதுரையிலிருந்து ஏப்ரல் 18 ஆம் - நாளன்று இரவு மதுரை - இராமேஸ்வரம் புகைவண்டி மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துத் தமிழ்த் துறைத் தலைவர் **டாக்டர் இராம. பெரியகருப்பன்**, அவரது துணைவியார், **டாக்டர் நா. ஜெயராமன்**, வரலாற்றுத் துறையைச் சார்ந்த **டாக்டர் இரா. வேங்கடராமன்**, பேராசிரியர் பா. **செல்வராசு** ஆகியோருடன் நானும் சேர்ந்து ஒரு குழுவாகப் புறப்பட்டோம். மதுரை புகைவண்டி நிலையத்திலேயே பயணம் களைகட்டி விட்டது. மாநாட்டிற்குப் பேராளராக வரும் பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் எங்களுடன் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. மதுரை மீனாட்சி ஆலயத்தின் எழுத்தர் திரு. பெருமாள் வழியனுப்ப வந்திருந்-தார். அன்னையின் அருளே துணை நிற்பது போன்றிருந்தது. வழக்கம் போலப் புகை வண்டி தாமதமாகப் புறப்பட்டதில் வியப்பில்லைதானே!

19-4-82 திங்கள்

அதிகாலை 4.30 மணி அளவில் இராமேசுவரம் இரயில் நிலையத்தில் இறங்கினோம். எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம். விடுதியை அடைந்து காலைக் கடமைகளை முடித்தோம். இராம-நாத சுவாமி ஆலயம் சென்று வழிபட்டோம். காலை 10.40 மணி அளவில் புறப்பட்டுத் துறைமுகம் சென்றோம். தெரிந்த நண்பர்கள் உதவியாலும் கப்பல் நிர்வாகத்திலும் சுங்கத் துறையிலும் பணி-யாற்றும் எங்கள் மாணவ நண்பர்கள் உதவியாலும் முன்னுரிமை வழங்கப்பெற்று கப்பல் ஏறச் சென்றோம். ஆசிரியராகப் பணியாற்று-வதில் உள்ள மதிப்பை அங்கு நன்றாக உணர்ந்தோம். பயணி-களையும் அவர்தம் பொருட்களையும் சிறு தோணிகளில் ஏற்றிக் கப்பலுக்கு அழைத்துச் சென்றனர். கணிதமேதை இராமாநுஜம் பெயரைத் தாங்கி அக்கப்பல் பெருமிதத்துடன் நின்றது. தம்-முடைய வாழ்க்கையைச் சென்னைத் துறைமுக அலுவலகத்தில் தொடங்கியதும், தாமே பயின்று போட்ட கணக்குகள் மூலம் மேதை-யானதும், அவரது நினைவைப் போற்றும் வண்ணம் நூற்றாண்டு விழாவில் அவர் பெயரையே கப்பலுக்குச் சூட்டியதையும் அறிந்து மகிழ்ந்தேன். விவேகானந்த சுவாமி அவர்கள் முன்பு உலகமெங்கும் இந்து சமயத்தைப் பரப்புவதற்காக இதே முனையிலிருந்து புறப்-பட்ட காட்சியும், அவரை உலகறியச் செய்த சேதுபதி மன்னரின் செயற்கரிய செயலும் எண்ணிப்பார்த்தேன்.

பயணிகள் அனைவரும் ஏறிய பின்னர், கப்பல் இராமேஸ்-வரத்தை விட்டுப் பிற்பகல் 3.00 மணி அளவில் புயப்பட்டது. கப்-பலில் உடன் வந்த பயணிகளில் இருநூற்றுவர் மாநாட்டுப் பிரதி-நிதிகளாக இருந்தனர். ஆய்வரங்கில் கட்டுரை படிப்போர், மடங்-களின் பிரதிநிதிகள், பார்வையாளர், பொதுநிலை அரங்கில் பங்கு பெறுவோர், பேச்சாளர், கலைஞர் என்று பல்வேறு திறத்தார் இருந்தனர். இவர்கள் அனைவரையும் தமிழ்கூறு நல்லுலகிற்கு அறிமுகஞ்செய்யும் பத்திரிகையாளர் பலரும் உடன்வர விழவொலி விண்ணளவும் சென்ற காட்சி மகிழ்வைத் தந்தது. கப்பல் அனை-வரையும் சுமந்துகொண்டு மெல்ல மெல்லச் சென்றது. கடல் கடந்து சென்ற தமிழ் மன்னர்களின் அருஞ்செயல்கள், தமிழின் பெருமை, இந்து சமயச்சிறப்பு, கலாச்சார மேன்மை ஆகிய அனைத்தையும் கடல் நினைவுபடுத்திவர, மாலை 6.30 மணியளவில் தலைமன்-னாரை அடைந்தோம்.

**தலை மன்னார் - கொழும்புச் செலவு :**

கப்பல் நின்றதும், உலக இந்து மாநாட்டுப் பிரதிநிதிகளை முதலில் இறங்கச் செய்தனர். மாநாட்டிற்கு வந்திருந்த பேராளர்கள் அனைவரையும் மிக விரைவாக அனுப்பிய துறைமுகச் சுங்க அதிகாரிகளின் சுறுசுறுப்பு ஒருபுறம்; பேருந்துகளையும், சொகுசு மினி வண்டிகளையும் வைத்துக் கொண்டு எங்களை அழைத்துச் செல்லக் காத்திருந்த அன்பர்கள் ஒருபுறம்; தலைமன்னார் மாவட்ட ஆட்சியாளர் உள்ளிட்ட அரசுப்பணியாளர்கள் ஒருபுறமாக அன்பு உபசரிப்பில் எங்களைத் திக்குமுக்காடச் செய்தனர். பிரதிநிதிகள் அனைவரையும் ஏற்றிக்கொண்டு பேருந்துகள் அணிவகுத்துப் புறப்பட்டன. எங்களுக்கு இரவு உணவு தலைமன்னாரிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இடியாப்பமும்,தேங்காய்ப் பாலிலிருந்து தயாரிக்கப்படும் சொதி எனப்படும் ஒருவகை உணவும் இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டை நினைவூட்டின. இரவு 10½ மணியளவில் பயணம் தொடங்கியது. அதிகாலை 2-30 மணியளவில் ஆரவாரமான ஓசை கேட்டு, வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த அனைவரும் விழித்துப் பார்த்தோம். அடர்ந்த காட்டின் நடுவே சென்று கொண்டிருந்த வண்டி நின்றது. சில அடி தொலைவிற்கு முன்னால் வண்டியை நோக்கி ஒரு காட்டு யானை. காட்டில் தனித்து ஒரு யானை வருவது எப்பொழுதுமே ஆபத்து தானே! ஓட்டுனரின் அறிவுரைப்படி கண்ணாடி ஜன்னல்களை அடைத்துக் கொண்டு அரவம் இன்றி இருந்தோம். ஓட்டுனர் வண்டியின் தலை விளக்குகளை அணைத்து ஒளிவீச யானை வண்டியை நோக்கி முன்னேறியது. வந்த யானை திடீரென்று பின்வாங்கியது. மீண்டும் வண்டியை நோக்கி வந்தது. சில நொடிகள் நின்று பார்த்துவிட்டு வந்தவழியே திரும்பி விட்டது. வண்டிக்குள் இருந்த ஒருவர் தென்னாடுடைய சிவனே போற்றி என்று குரல் கொடுத்தார். இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பு காலை 6 மணியளவில் வண்டிக்குள் ஒலிக்கும்போது கொழும்பு மண்ணை மிதித்தோம்.

**20-4-82 செவ்வாய்**

காலை 7½ மணியளவில் கொழும்பு காலி வீதியிலுள்ள பிரதேச அபிவிருத்தி அமைச்சகத்தின் வாயிலை அடைந்தோம். எங்கள் அனைவருக்கும் அங்கிருந்த அலுவலர்கள் தங்குமிடம் பற்றிய விளக்கங்களைக் கூறினர். குடும்பத்தோடு வந்தவர்களுக்குப் பிரமுகர்களின்

வீடுகளிலும், சிலருக்கு இராமகிருஷ்ணா மடத்திலும், வேறு சிலருக்கு நட்சத்திர விடுதிகளிலும் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தனர். எங்கள் அறுவர் உள்ளிட்ட பலருக்கு விஜயராம மாவத்தையிலுள்ள விவசாய ஆய்வுப் பயிற்சிநிலைய விடுதியில் தங்குமிடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எங்களையெல்லாம் அழைத்துச் செல்ல வண்டி-கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு, உதவியாளர்களும் உடன் வந்தனர். செல்லும் வழியெல்லாம் இருபுறமும் பசுமையான காட்சி-கள். ஈழத்தில் என்னைப் பெரிதும் கவர்ந்த காட்சி, செயற்கையாக உருவாக்கப்பட்ட நகர வீதிகளில் கூட, கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகையில் குளிர்மரங்கள் நிறைந்த காட்சியாகும். அறைக்-குச் சென்று காலைக்கடமைகளை முடித்தோம். பல்வேறு இடங்களில் தங்கியிருந்தாலும் உணவிற்கு ஒரே இடத்தில் கூடினோம். மாநாடு தொடங்குவதற்கு முதல் நாளான இன்றுமட்டும் 'சாந்தி விஹார் விடுதியில்உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலை உணவிற்குப் பின் பேராளர் கட்டணம் செலுத்திப் பதிவுசெய்து கொள்வதற்காக இந்துக் கல்லூரிக்குச் சென்றோம். இது பம்பலப் பெட்டி என்ற இடத்தில் அமைச்சகத்திற்கு அருகில் உள்ளது. இக்கல்லூரியில் தான் மாநாட்டுத் தொடர்பான புத்தகக் கண்காட்சி, மாலை வேளைக் கலைநிகழ்ச்சி ஆகியவற்றுடன் உணவிற்கும் ஏற்பாடு செய்யப் பெற்-றிருந்தது.

மாலையில் நகரைச் சுற்றிப் பார்த்துவரும் வழியில் கடை வீதிகளுக்குச் சென்றோம். ஓர் வியத்தகு செய்தி—கொழும்பு நகரில் அனைத்துக் கடைகளும் மாலை 5 மணிக்கே மூடப்பட்டு விடுகின்றன. நகரின் முக்கிய இடமான செட்டியார் தெருவில் நகைக் கடைகள் மிகுதி. நாங்கள் சென்றபோது கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டு தெருவே வெறிச்சோடியிருந்தது. காரணத்தை அறிந்து திடுக்கிட்-டோம். செல்வ வளமிக்க இந்நகரில், திருடர் பயம் மிகுதியாக இருப்பதுவே காரணம் என்று அறிந்து திடுக்கிட்டோம். இரவு உணவிற்குக் கூடியபொழுது தமிழகத்தின் பிரதிநிதிகள் பலரையும் சந்தித்தோம். தமிழ்நாட்டில் இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

21-4-82 **புதன்**

இன்று அதிகாலை 6.30 மணியளவில் பம்பலப் பெட்டியிலுள்ள ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் விசேட வழிபாடு, யாகம் ஆகியவற்றுடன் மாநாடு தொடங்கியது. காலை 8.30 மணியளவிற்கு,

அலங்கரிக்கப்பட்ட யானைகளின் மீது சைவத் திருமுறைகள் வைக்கப்-பட்டு ஊர்வலம் தொடங்கியது. ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சி-யாக இருந்தது. பகல் 11 மணி அளவில் இந்துக் கல்லூரியில், இலங்கை அரசின் அஞ்சல், செய்தித் துறை அமைச்சர் மாண்புமிகு **விஜயதுங்கே** அவர்களால் மாநாட்டு நினைவு அஞ்சல்தலை வெளியிடப்பட்டது. பகல் 12 மணி அளவில் இந்துக் கல்லூரி சரசுவதி ஹாலில் நீதி அமைச்சர் மாண்புமிகு **டாக்டர் வி யரத்னே** அவர்களால் புத்தகக் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. இக்கண் காட்சியில் இந்து சமயத் தொடர்பான அரிய பல நூற்கள் இடம் பெற்றன. பகல் 12.30 மணி அளவில் தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு **எஸ். தொண்டமான்** அவர்கள் சிறப்ப, புகைப்படக் கண்காட்சியைத் தொடங்கி வைத்ததுடன் காலை நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

**மாநாட்டின் தொடக்கம்**

மாநாட்டின் முறையான தொடக்கம் மாலை 5 மணி அளவில் பண்டாரநாயகா சர்வதேச நினைவு அரங்கில் சிறப்பாக அமைந்தது. அரங்கு முழுவதும் குளிர்சாதன வசதி பொருத்தப்பட்டிருந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் இருந்து காணக்கூடிய வசதி மிக்கது. இம்மன்றம். இலங்கை அரசின் ஆட்சி மொழிகளான சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் எந்த ஒரு மொழியில் உரை நிகழ்த்தப் பட்டாலும், உடனுக்குடன் அதை ஏனைய மொழிகளில் பெயர்க்கும் வசதி இருக்கிறது. பார்வையாளர் தம் இருக்கையில் இருந்தவாறே பேசுவதற்குரிய ஒலிபெருக்கி வசதி, மொழி பெயர்-பைச் செவிமடுக்கும் காதொலி வசதி ஆகியனவும் இருக்கைகளிலே உண்டு. இந்த அரங்கிலே இவ்வசதிகளுடன் அமைந்துள்ள குழு அறைகளில் தான்மாநாட்டுஆய்வரங்குகள்முற்பகலில் நடைபெற்றன.

மாலை 4 மணிக்குள்ளாக மாநாட்டுப் பேராளர்கள், பார்வை யாளர்கள், சிறப்பு விருந்தினர்கள், பத்திரிகையாளர்கள், மடத்துத் தலைவர்கள் ஆகிய அனைவரும் இருக்கைகளில் வந்து அமர்ந்தனர். மேடையில் நாயன இசை ஒலித்துக் கொண்டிருந்தது. 4¼ மணியளவில் அமைச்சர் செ. இராசதுரை. அலங்கை குடியரசின் ஜனாதிபதி அதி-உத்தம ஜெயவர்த்தனேதமது துணைவியாருடன் மேடைக்குவந்தனர். நிகழ்ச்சிகள் சிறப்பு வழிபாட்டுடன் தொடங்கின. மேடையின் இடது புறத்தில் வைக்கப்பட்டிருந்த விநாயகர், சிவன், திருமால் உருவத்திரு

மேனிகளுக்கு அர்ச்சகர்கள் வேதமுறைப்படி வழிபாடு செய்ய, ஓது-வார்கள் 'மண்ணில் நல்ல வண்ணம்' தேவாரப் பாடலைப் பாட, வழிபாடு முடிந்தது. சீர்காழி எஸ். கோவிந்தராசன் கடவுள் வாழ்த்துப் பாடிய பின் ஜனாதிபதி குத்துவிளக்கேற்றி முறையாக விழாவினைத் தொடக்கி வைத்தார். அமைச்சர் இராசதுரையின் வரவேற்புரையை அடுத்து இலங்கைக் குடியரசுத் தலைவர் தொடக்கவுரை ஆற்றினார். இலங்கையில் ''அகில உலக இந்துசமய ஆய்வுமையம்'' ஒன்று ஐ.நா. சபை அமைப்பில் விரைவில் தொடங்கப்பட இருப்பதாக பலத்த கரவொலிகளுக்கிடையில் அவர் தெரிவித்தார். அதனையடுத்து பல்வேறு மடத்துத் தலைவர்கள் வாழ்த்துரைத்தனர். ஜனாதிபதி மாநாட்டு மலரை வெளியிட்டார். நாடு தழுவிய அளவில் இலங்கை அரசு பள்ளி, கல்லூரி மாணவர்களுக்காக நடாத்திய பல்வேறுபோட்டி களில்வென்றவர்களுக்குப்பொற்பதக்கங்களைச்சீ மாட்டிஜயவர்த்தனே அளித்தார். விழாக் குழுத்தலைவர் கி. இலச்சுமண ஐயர் நன்றி கூற, தொடக்கவிழா இனிது நிறைவேறியது. அதே மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 7.45 மணி முடிய சீர்காழி எஸ். கோவிந்தராசனின் இசைக் கச்சேரியும், அதனையடுத்து 8 மணி முதல் 9 மணி முடிய டாக்டர்செல்வி பத்மா. சுப்பிரமணியத்தின் நடனமும் இடம் பெற்றன.

**ஆய்வரங்கு :**

22-4-'82 முதல் 24-4-'82 வரை மூன்று நாட்களிலும் முற் பகல் 9 முதல் பகல் 1-15 முடிய பண்டாரநாயகா நினைவு சர்வ-தேச கருத்தரங்க மண்டபக் குழு அறை A, B, C ஆகியவற்றில் முறையே ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் அமைந்த 52 ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தளிக்கப்பட்டன. இலங்கை, இந்தியா, ஜெர்மனி, உரோம், மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், யூகோஸ்லாவியா உள்ளிட்ட நாடுகளின் பேராளர்கள் கட்டுரைகளைப் படிக்க, பார்வையாளர்கள் அவைபற்றி உடனுக்குடன் விவாதித்தனர். கட்டுரைகள் யாவும் தட்டச்சு செய்யப்பட்டு வழங்கப்பட்டன. மூன்று நாட்களிலும் தமிழில் கட்டுரைகள் வாசிக்கப்பட்ட அறையான C-யில் மிகுதியான கூட்டம் இருந்தது குறிப்பிடத்தக்கது. இலங்கை வானொலி சேவை 1 (தேசிய ஒலிபரப்பு) அலைவரிசை வாயிலாக (ஒவ்வொரு ஆய்வுக்-கட்டுரையின் சுவையான பகுதிகளை) அன்றன்று மாலையே ஒலி-பரப்பியது. அதேபோல் இலங்கைத் தொலைக்காட்சியான ரூப-வாஹினியும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது.

**பொதுநிலை அரங்கு :**

பம்பலப்பெட்டியில் உள்ள புதிய கதிரேசன் மண்டபத்தில் 21-ஆம் நாள் முதல் 25-ஆம்நாள் வரை தினந்தோறும் காலையிலும் மாலையிலும் நிகழ்ச்சிகள் இருந்தன. இவற்றில் கரகம், காவடி, வசந்தன் ஆட்டம், யோக விளக்கம், வில்லுப்பாட்டு முதலியவையும் தேவாரப் பண்ணிசை, குழலிசை, யாழிசை ஆகியவையும் இலங்கைக் கோயில்கள், தமிழகக் கோயில்கள், குமரிக்கண்டம் ஆகிய படக்-காட்சிகளும், சொற்பொழிவுகளுமாக அமைந்து பொதுநிலை நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது.

22-4-82 அன்று மாலையில் இந்துக்கல்லூரி மைதானத்தில் அமைச்சர் செ. இராசதுரை அவர்கள் மடத்துத்தலைவர்கள் அனை-ல் வர்க்கும் பொன்னாடை போர்த்தி வரவேற்றுப் பேசினார்.

**கலைநிகழ்ச்சிகள் :**

மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணி முடிய கலைநிகழ்ச்சி-கள் வெள்ளவத்தை இராமகிருஷ்ணா மிஷன் அரங்கு, பம்பலப்பெட்டி இந்துக்கல்லூரி மைதானம், விவேகானந்தா அரங்கு, ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி ஆலயம் ஆகியவற்றில் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் குழுவினரின் நாயன இசை, சூலமங்கலம் சகோதரிகளின் இன்னிசை, திருமதி M.L. வசந்தகுமாரியின் இன்னிசை, சீர்காழி எஸ். கோவிந்தராசனின் இசை, திருமுருக கிருபானந்தவாரியாரின் இன்னிசை விரிவுரை ஆகியவற்றுடன் ஈழநாட்டுக் கலைஞர்களின் இசை, நாட்டுக்கூத்து உள்பட பலவாறாக இருந்தன. இவ்வாறு ஒரேசமயத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற எதனைத் தள்ளுவது எதைக்கேட்பது என்று முடிவு செய்ய இயலாமல் அனைவரும் தவித்-தனர்.

**நிறைவுவிழா :**

25.4.82 அன்று காலை 9.30 மணி அளவில் பண்டாரநாயகா நினைவு சர்வதேச மாநாட்டு அரங்கில் மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரும் ஒன்றுகூடி, சில தீர்மானங்களைநிறைவேற்றினர். அன்று மாலை இலங்கைக் குடியரசின் பிரதமர் மாண்புமிகு ஆர். பிரேம தாசாவும், சீமாட்டி பிரேமதாசாவும் சிறப்பு விருந்தினர்களாகப்

பங்கேற்க 5.00 மணி அளவில் அகில உலக இந்து மாநாட்டின் நிறைவுவிழா இனிதே நடைபெற்றது. முறையான வழிபாடுகள், தேவார இன்னிசை ஆகியவற்றிற்குப் பின் அமைச்சர் மாண்புமிகு-செ. இராசதுயைிரன் வரவேற்பிற்குப் பின்பு பிரதிநிதிகள் பலர் பாராட்டியும் நன்றிகூறியும் மகிழ்ந்தனர். இலங்கைப் பிரதமரின் சிறப்புரைக்குப் பிறகு சீமாட்டி பிரேமதாசா, போட்டி பெற்றவர்-களுக்குப் பரிசுகள் வழங்கினார். இறுதியாக இரவு 7.30 மணி முதல் 9.00 மணி முடிய தமிழக அரசின் நர்த்தகி செல்வி சுவர்ணமுகி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி மிகச் சிறப்பாக இடம்பெற, மாநாடு சிறப்பாக முடிந்தது

பௌத்த சமயத்தைஅரசுமதமாக ஏற்றுக் கொண்ட ஈழநாட்டில் இந்துசமய உலகந்தழுவிய மாநாடு இத்தனைச் சிறப்பாக நடந்தது பெரிதும் பாராட்டத்தக்கது. பார்வையாளர்கள், பேராளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் என்ற அனை-வரையும் இந்த ஐந்து நாட்களிலும் இலங்கை அரசு கவனித்து விருந்து பேணிய முறை பெரிதும் பாராட்டத்தக்கது. தங்கிருந்த இடங்களிலி-ருந்து உணவுக் கூடத்திற்கும் மாநாட்டு அரங்குகளுக்கும் கலை-நிகழ்ச்சிக் கூடங்களுக்கும் அழைத்துச் செல்லவும் நகரின் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று நகரைச் சுற்றிக் காட்டவும் வண்டி-களைத் தந்து எங்கும் செல்லவும் முகங்கோணாதுஉடன்வரத் துணை-வர்களாக இளைஞர்களை—சிறுவர்களை—பள்ளி-கல்லூரி மாணவர்-களை — அனுப்பிய பாங்கும் போற்றத்தக்கது. அவர்களின் சுறு-சுறுப்பும் இன்மொழியும் அவர்கள் நாடு,கல்விமுறை, பழக்கவழக்கங்-கள் பற்றிய வினாக்களுக்குத் தயக்கமின்றி விடை கூறிய பாங்கும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

இலங்கையில் எங்குப் பார்த்தாலும் இயற்கை வளமும் செல்வச் செழிப்பும் இருந்தது. நகரமோ கிராமமோ எங்கு நோக்கினும் அகன்ற சாலைகள், இருபுறமும் மரங்கள்-அனைத்திற்கும் மேலாகத் தூசி- துரும்பு ஏதுமில்லாத சுத்தமான வீதிகள். பெரும்பாலான இடங்கள் கடற்கரையோரமாக உள்ள அமைப்பு என்று கூறலாம். இலங்கையில் பள்ளி கல்லூரி என்று அனைத்து நிலைகளிலும் கல்விக்குப் பயிற்றுமொழி தமிழ்தான். மாணவர்களுக்குப் பேசவும் எழுதவும் ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி உள்ளதா என்று ஒவ்வொரு நிலையிலும் கவனிக்கப்படுகிறது. அதேபோல புத்தமதம், இந்துமதம்,

கிறிஸ்துவ மதம், இஸ்லாம் ஆகிய சமயக் கல்வி எல்லாநிலை வகுப்புக்களிலும் உண்டு. மாணவர்களுக்கு அவரவருடைய சமயக்கல்வி கட்டாயக் கல்வியாகிறது. அப்பாடத்தில் தேர்ச்சி பெற்றால் தான் அடுத்த வகுப்பிற்குச் செல்ல முடியும். சமயக் கல்விக்குரிய பாட நூல்களை அரசாங்கமே அச்சிட்டுத் தருகிறது. எச்சமயத்தவர் நடத்தும் கல்வி நிறுவனமாயினும் அங்குப் பிறசமயங்களைப் பற்றிக் கற்றுத்தர, கற்க, வழிபட, விழாக்கள் நடத்த அனுமதி தரப்படும் அடிப்படைப் பண்பு உள்ளது. சமயப்பொறை அந்நாட்டில் அனைத்து நிலைகளிலும் காணப்படுகிறது.

**சுற்றுலா-கதிர்காமச் செலவு :**

மாநாடு முடிந்தபின் 4 நாட்கள், 2 நாட்கள் என்று வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்றனர். 26-4-82 அன்று ஒருநாள் ஓய்விற்குப் பிறகு 27, 28 ஆகிய இருநாட்களில் கதிர்காமம் சென்று வந்தோம். எனவே, எங்களையும் வேறுசிலரையும்வேறொருவிடுதிக்கு அழைத்துச் சென்று அங்கேயே தங்கவும் உண்ணவும் ஏற்பாடு செய்தனர். கடற்காற்று (*Sea breeze*) என்று பெயர்பெற்ற அந்த விடுதி கடற்கரையில்நுங்கும்நுரையுமாகஅலைக்கரங்கள்தாலாட்டஇருந்தது. 26 - 4 - 82 பகலிற்குப் பின் நாங்கள் அங்கு வந்தோம். 27 - 4 - 82 செவ்வாயன்று காலை 10 - மணி அளவில் கொழும்பு இந்துக் கல்லூரியிலிருந்து எங்களை ஏற்றிக்கொண்ட பேருந்து கதிர்காமம் நோக்கிப் புறப்பட்டது. அப்பேருந்தில் 35 பேர்கள் இருந்தோம் பேருந்திலே உடன் வந்த இருவர் போக, எங்களுக்கு உதவவும் வழிகாட்டவும் ஆகச்சிலரும் பாதுகாப்பிற்காகக்காவலருமாகவேறொரு ஊர்தியில் நால்வர் வந்தனர். கொழும்பு நகரை அடுத்து உள்ள பாணதுறை கழிந்தபின் ஒரு புத்த ஆலயத்தைக் காணஇறங்கினோம். நம் ஊரில் எங்குப் பார்த்தாலும் விநாயகர் ஆலயம் இருப்பதுபோல இலங்கையில் மிகுதியாக எங்கெங்கு காணினும்புத்தபிரான் திருவுருவச் சிலைகளைக் காண முடிந்தது. குறிப்பிட்ட புத்த ஆலயம் ஆசியாவிலே மிகப்பெரிதாகும். சுமார் 200 அடி உயரமிக்க இந்த ஆலயம் நல்ல அமைதியான சூழலில் அழகாயும் தூய்மையாயும் இருந்தது. ஆலயத்தில் மிக உயரத்தில் நான்கு திசைகளை நோக்கியும் புத்தபிரானின் நான்கு உருவத்திருமேனிகள் இருந்தவண்ணத்தில் அன்பும் அருளும் அமைதியும் கொழிக்க இருந்தன. அங்கிருந்து புறப்பட்டு எங்கள் பயணம் தொடர்ந்தது. சுமார் ஏழு மணி நேரப் பயணத்திற்குப் பிறகு (இடையில் பகல் உணவிற்காகவும் மாலைத் தேனீர்க்காகவும் செலவிட்ட ஒரு மணி நேரம் உள்பட) நாங்கள் கதிர்காமத்தை மாலை 6.00

மணி அளவில் அடைந்தோம், இப்பயணத்தின் வழி பெரும்பாலும் கடற்கரைச் சாலை ஓரமாகவே இருந்தது. அக்காட்சி மனத்திற்கு மிகவும் இனிமையைத் தந்தது. கதிர் காமத்தில் மாணிக்க கங்கை ஆற்றில் நீராடியபின் கந்தவேளைத் தரிசிக்கச் சென்றோம் பூசை 7 00 மணி அளவில் இருந்தது. விநாயகர், கதிர்காமக்கந்தன், தண்டாயுத பாணி, தெய்வானை அம்மன் ஆகிய மூர்த்தங்களுக்குவழிபாடு இருந்தது. தண்டாயுதபாணி சன்னிதியில் மட்டுமே உருவத்திருமேனி இருந்தது. ஏனைய சன்னிதிகளில் திரைச் சீலைகளில் தீட்டப்பட்ட சித்திரங்களையே வழிபடுகின்றனர். கதிர்காமத்தில்கந்தனுக்கு நடைபெறும் வழிபாட்டு முறையில் பல்வேறுகூறுகள்இடம்பெற்று உள்ளன. 'வனமுறை வேடன் அருளின பூசை மகிழ் கதிர்காமம்உறைவோனே' என்று அருணகிரிநாதர் பாடியது போல வேடர்வழிபாடுமுறை இசைக் கருவிகள் ஒலிப்பில் காணப்படுகிறது. வழிபாடுகளை யெல்லாம் முடித்துக்கொண்டு எங்களுக்கென்று அங்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இரவு உணவை முடித்துக்கொண்டு, இலங்கை வங்கியின் விருந்தினர் இல்லத்தில் இரவு உறங்கினோம். 28 - 4 - 82 அன்று அதிகாலை 4-00 மணிக்குப் புறப்பட்டுமுற்பகல் 11-30 மணி அளவில் கொழும்பிற்கு நலமாகத் திரும்பி வந்தோம்.

28-4-82 புதன்கிழமை மாலை 6-40 மணி அளவில் தலைமன்னார் செல்லும் புகை வண்டியில் புறப்பட்டோம். பிற்பகலில் பெய்த மழையால் மண் குளிர்ந்திருந்தது. அந்தப் புகையிரதப் பயணம் வசதியாகவிருந்தது. 29 - 4 - 82 அன்று அதிகாலை 4- 30 மணி அளவில் தலைமன்னாரை அடைந்தோம். முதலிலேயே நாங்கள் கப்பலில் ஏற நண்பர் ஒருவர் உதவினார். 5- 30 மணிக்கு கப்பலின் மேல்தளம்வந்துகாலைக்கடமைகளை முடித்துத்திரும்பும் பயணத்திற்கு ஆயத்தமானோம். கப்பலிலே காலை உணவை முடித்துக்கொண்டு காத்திருக்க, அனைவரும் ஏறியபின் காலை 10- 15 மணி அளவில் கப்பல் புறப்பட்டது. பகல் உணவையும் கப்பலில் முடித்துக் கொண்டு பிற்பகல் 1-30 அளவில், இராமேசுவரம் வந்தோம். படகு ஏறித் துறைமுகம் வந்து சுங்கச் சோதனை முடித்து, விடுதி வந்தோம். ஓய்வு, உணவு, இரவு ஆலய வழிபாடு முடித்து அன்றிரவு 10-00 மணி புகையிரதத்தில் புறப்பட்டோம். மறுநாள் 30 - 4 - 82 அன்று அதிகாலை 4-30 மணி அளவிற்கு நலமாக மதுரை வந்தடைந்தோம்.

இப்பயணத்தின்வழி சமயத்துறை அறிஞர்கள் பலரைக் கண்டு களிக்க முடிந்து, சின்னஞ்சிறு நாடாயினும் ஈழத்துச் சுறுசுறுப்பையும் உழைப்பையும் பண்பாட்டையும் அறிய முடிந்தது. பிறருக்கு உதவும் பாங்கை உணர முடிந்தது. தமிழ்மொழி வளர்ச்சியை உய்த்துணர அனைத்திற்கும் மேலாக நேசக்கரம் நீட்டி வரவேற்றுப் போற்றும் ஈழநாட்டில் அரசு புத்தமதச் சார்புடையதாக இருப்பினும் பிற சமய வளர்ச்சியில் காட்டும் அதன் ஆர்வமிக்க ஈடுபாட்டை அகில உலக இந்து மாநாட்டைக் கூட்டி வெற்றிகரமாக நடாத்திய பாங்கில் உணர முடிந்தது.

''சிங்களத் தீவிக்கோர் பாலம் அமைப்போம்.  
சேதுவை மேடிறுத்தி வீதி சமைப்போம்  
வையத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்  
மையத்து நாடுகளில் பயர் செய்குவோம்''  
—பாரதி.

# இலக்கியத்தில் இமயமலை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கு. சதாசிவன் M.A., Mphi
மதுரைப் பல்கலைக்கழகம்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த சீன புனிதப் பயணத் துறவி யுவான் சுவாங் ''பலூச்சிஸ்தானம் வரையிலும் ஏராள மானவர்கள் பாசுபதர்களாகவே யிருந்தனர்'' என்று கூறுவதாக ஆர்.சி. மசும்தார் கூறுகிறார். நம் நாட்டில் சைவ சமயம்—பாசுபதம் காபாலிகம், காளாமுகம், லிங்காயதம் (வீரசைவர்கள்) என்ற வகைகளில்—அதிகம் நிலைத்து நிற்பது தமிழ் நாட்டிலேதான். ஏனெனில் தமிழர்கள் வழி வழி வந்த சைவ சமயத்தினர். சங்க காலத்தில் முழுமுதற் கடவுளாக மக்களால் போற்றப்பட்ட கடவுள் சிவனே. ஆனால் அவரைப் பற்றிய சிறு குறிப்பு கூட தொல் காப்பியத்தில் இல்லையே என்று பலர் கூறுவர். தொல் காப்பியம் இயற்றப்படுவதற்கு முன் தமிழ் மொழியில் இயற்றப்பட்டதாகக் கூறப்படும் சில [அகம், புறம் என்ற தொகுப்பில் வரும்] பாடல் களில் அவர் குறிக்கப்படுகிறார். சிவன் மரத்தில் உறையும் கடவுள் என்றும், அவனே இமயம் முதல் குமரிவரை ஆளுகிறான் என்றும் அவர்கள் அறிந்திருந்தனர். அவன் ஜீவன் (உயிர்) தரும் கடவுள் எனவே அவன் **ஜீவன்** என்றும் **சிவன்** என்றும் அறியப்பட்டான். உயிர் உறுப்பின் சின்னமாகிய லிங்கத்தை அவர்கள் வழிபட்டனர். அவர்களுக்கும் சிந்துவெளி மக்களுக்கும் உள்ள தொடர்பினைக் காட்டவல்லது இந்த லிங்க வழிபாடு ஆகும். அது போன்று சிந்து வெளியில் காணப்பட்ட மோதிரக் (வட்ட) கிணறுகள் (*ring-wells*) தமிழகத்திலும் (காஞ்சியில்) கண்டு கொள்ளப்பட்டுள்ளன. உறையூர், திருக்கம்புலியூர், கொற்கை ஆகிய இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட மட்பாண்டங்கள் சிந்துவெளி மட்பாண்டங்களை ஒத்திருக்கின்றன. ஹரப்பாவில் கிடைத்த 3 அங்குல உயரமுள்ள கருமட்பாண்ட நாட்டிய உருவம் சோழர் கால நடராஜரை ஒத்திருக்கிறது என்று தொல்லாய்வு அறிஞர் ஹைஹன். டி.சங்காலியா அறிவித்தார்.*அத்துடன் சிந்துவெளி மக்கள் பேசி வந்த மொழி திராவிட மொழியாக இருக்கலாம்

---

* K.K. Pillay, *Historical Heritage of the Tamils, p.4*

என்பதும் இக்கருத்துக்கு அணி செய்கிறது.† எனவே பாசுபத சைவ சமயம், அந்தப் பெயரில், அந்த நோக்கில் தமிழகத்தில் அன்று இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் அது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிக்குப் பின்னரே தமிழகத்தில், குறிப்பாகக் காஞ்சியில் சமுத்திரகுப்தருக்குப் பின்னரே வந்துள்ளது என்ற கருத்து ஏற்புடைத்தன்று. திருக்கேதாரம், பசுபதி நேபாளம் போன்றசைவத் திருத்தலங்கள் பெரும்பாலும் சங்கம் மருவிய காலத்திற்குப் பின்னரே உச்ச நிலையை எட்டியிருக்க வேண்டும். அது ஒருவேளை வட நாட்டில் ஏற்பட்ட பக்திப் பெருக்கின் விளைவாகலாம். அதன் விளைவாகத்தான் சம்பந்தர் அவற்றைப் பற்றித் தம் பதிகங்களில்கூறியிருக்கலாம்.

இமயமலைக் கண்ணுள்ள வைணவத் திருத்தலங்கள் ஏதும் சங்கத் தமிழ் இலக்கியங்களில் கூறப்படவில்லை. திருமாலாகிய விஷ்ணுவின் சிறப்பினைக் கூறும் பரிபாடலில் வடநாட்டில் கூறப்படும் பல கதைகளும் கருத்துக்களும் விரவி வருவதை ஆய்வோர் அறிவர். ஆனால் அந்நூலிலும் இம்மலைக் கண்ணுள்ள வைணவத் திருத்தலங்கள் ஏதும் குறிக்கப் பெறவில்லை. எனவே இத்திருத்தலங்கள் இவ் யுகத்தின் தொடக்க காலங்களில் புலவர், அறிஞர், பக்தர் அறியுமளவு சிறப்படைந்திருக்கமாட்டா என்பது அறியத்தக்கது.

வடநாட்டு வைணவத் திருத்தலங்களை முதன் முதலில் தமிழ் இலக்கியத்தில்புகுத்தியவர் ஆழ்வார்களே. அவர்கள் கூறும் வடநாட்டு வைணவத் திருத்தலங்கள் அயோத்தி, வட மதுரை, துவாரகை, திருவாய்ப் பாடி, திருப்பாற்கடல், திருபிரிதி, கடிநகர் (கண்டம்), வதரியாச்சிரமம், சாளக்கிராமம், நைமிசாரணியம் என்பனவாம். இவற்றில் இமயமலைப் பகுதியில் உள்ள வைணவத் திருத்தலங்கள் திருப்பிரிதி, நைமிசாரணியம், வதரியாச்சிரமம், சாளக்கிராமம் ஆகியன. இவற்றைப் பெரியாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடியுள்ளனர். இவ்விருவரில் திருமங்கையாழ்வார் மட்டுமே மேற்கூறப்பட்ட இமய-

---

† சிந்துவெளி மக்களின் மொழி இதுதான் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலையில் ஹெராஸ் பாதிரியார் அம்மொழி திராவிட மொழியே என்று குறிப்பிடுகிறார். அதனை எப்படியாவது மறுக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிய தொல்லாய்வாளர் எஸ்.ஆர். ராவ் என்பாரும் ஐராவதம் மகாதேவனும் பாதிரியாரின் கூற்றை மறுக்க முடியாத நிலையில் உள்ளார்.

மலை வைணவத் திருத்தலங்கள் எல்லாவற்றையும் தம் பாசுரங்களில் குறித்துள்ளார்.

இவற்றில் முதலாவதாகத் திருப்பிரிதியின் சிறப்பினைக் கூறுவோம். இத்திருப்பிரிதியில் வைணவ ஆலயம் உள்ளது. இத் திருத்தலம் இமயத்தில் இருப்பதாய் திருமங்கையாழ்வார் கூறு கிறார். * இதனை அவர் கூறும் 'நல்லிமயத்துள்' 'பூம்பொழி லிமயத்துள்' 'அருவரையிமயத்துள்' என்ற சொற்றொடர்கள் விளக்கு வன. 'இமயம்' என்ற சொல் இப் பாசுரங்களில் இரண்டாம் அடி இறுதியிலும், 'திருப்பிரிதி' ஒன்பதாம் பாசுரம் வரை இறுதியடியின் இறுதியிலும், பத்தாம் பாசுரத்தில் இரண்டாம் அடி இறுதியில் 'திருப்பிரிதி எம்பெருமானை' என்றும் வருவதைக் காணலாம். இத்தலத்தின் சிறப்பாக திருமங்கையாழ்வார் கூறும் செய்திகள்:$ 1) இடிமின்னலுடன் முகிலதிர, 2) இது கேட்டு பீலியுடையமயில் நடம் செய்யும், 3) தடஞ்சுனை—யானைகள் துயர்தீர, 4) வேங்கை மரப் பூக்களின் மெத்தையில் யானைகள், தம் பிடிகளுடன் வண்டு பாடும் இசையில் மயங்கித் துயில் கொள்ளுதல், 5) பிறங்கு மாமணி யருவி பிறக்கும், 6) அதிகம் கிடைத்த தேனைத் தன்னிளம் பிடிக் கருளும், 7) பிணங்கு பூம்பொழில் நுழைந்து வண்டிசை சொல்லும், 8) பேர்களாயிரம் பரவி நின்றடி தொழும், 9) இமயவர்கள் பிரம னோடு சென்றடி தொழும், 10) தாதுக்கள் நிறைந்த மலர்களில் வண்டுகள் நுழைதல் என்பனவாம். இவ்வனைத்தும் இயற்கை வருணனைகளாய் மட்டுமேயுள்ளன. பத்தாம் பாசுரத்தில் திரு மங்கையாழ்வார் 'அரிய இன்னிசைபாடும் நல்லடியார்க்கு' அருளு வாய் என்று திருப்பிரிதிநாதனை வேண்டுகிறார்.

நைமிசாரணியம் பற்றிய செய்திகளோ, இயற்கை வருண னையோ திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில்* இல்லை என்று தான் கூற வேண்டும். ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியடியின் இறுதி யில் 'நைமிசாரணியத்துளெந்தாய்'' என்று பாடியுள்ளர். இவை தம் கூடா ஒழுக்கங்களுக்கும், சிற்றினம் சேர்ந்தமைக்கும் பாவமன்னிப்புக்

---

* பெரிய திருமொழி, 1:2:1-10 பாசுரங்கள்

$ இச்செய்திகள் மேறகூறப்பட்டுள்ள பத்து பாசுரங்களின் திரட்டு ஆகும்.

* பெரிய திருமொழி, 1:6: 1—10 பாசுரங்கள்

கோருவதாய் அமைகிறது. எனவே நைமிசாரணியம் உறையும் திருமாலே பாவங்களை மன்னிப்பாய் என்று வேண்டுகிறார்.

வதரியாச்சிரமத்தைத் திருமங்கையாழ்வார் இரு பத்துக்களில்[1] கூறுகிறார். இத்திருத்தலம் 'கங்கையின் கரையில்' உள்ளதாய்ப் பாடப்பட்டுள்ளது. கங்கையாற்றினைப்பற்றி: 'மணிகொழித்திழிந்த', 'கங்கையின் வாய் முகட்டில்: 'மந்திரத்திழிந்த' என்ற சொற்றொடர்களால் விளக்குகிறார். அதன் சிறப்புக் கூறுகள்: 1) மதுவுண் வண்டு பண்கள் பாடும், 2) 'வாளைபாயும் தண்டடம் சூழ், 3) ஆழ்க்டலைக் கடந்த மைத்த சோதியம் பெருமாள்' உறையுமிடம், 4) 'வலங்கொள் தொண்டர் பாடியாடும்' என்பனவாம். இக்கூற்றுக்களும் வருணனைகளாய் மட்டுமேயுள்ளன.

இறுதியில் சாளக்கிராமம்$ பற்றி மங்கை மன்னன் கூறுவதைப் பார்ப்போம். இங்கும் இயற்கை அமைப்புக் கூறுகளே இடம் பெறு-கின்றன. இங்கு இமயவர் வணங்குவர்; எங்கும் அழகாய திருத்தலம்; 'சலம் சூழ்ந்தழகாய' இடம்; தாராவயல் சூழிடம்; சந்தர் பொழில் சூழ்ந்த திருத்தலம்; தண்டாமரைகள் முகமலர்த்துமிடம்.

மேற்கூறப்பட்ட செய்திகளை நோக்குங்கால், அவை பெரும்பாலும் இயற்கையமைப்புச் செய்திகளாயுள்ளன. இவை பல இடங்களுக்குப் பொதுவான அமைப்புகள். புலவர்கள் இவற்றைத் தம் கற்பனையிலிருந்து விளக்குவர். இவற்றில் பெருமைப்படத்தக்க நேர்முக வரலாற்று, சமய, புவியியல் அமைப்புச் செய்திகள் ஏதும் இல்லை. இவ்விடங்களை நேரிலே காணாது, செவிவழிச் செய்தி-களைக் கொண்டு, கற்பனைத் திறத்தையும் ஏற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகள் தரப்பட்டுள்ளனவே தவிர உண்மையான செய்திகள் அதிகம் இருப்பதாய்த் தோன்றவில்லை.

இடைக்காலங்ளுக்குப்பின் எழுந்த திருத்தலங்கள் அமர்நாத், சுவர்லமுகி, ஹரித்வார் என்பன. கெளரி இம்மலையின் மிக உயர்ந்த

---

† மேற்படி, 1:3: 1—10; 1:4: 1—10 பாசுரங்கள்

$ மேற்படி, 1:4: 1—10 பாசுரங்கள்

சிகரங்களுள் ஒன்றாகும். இங்குதான் கௌரி தவமேற் கொண்டதாகச் செவிவழிச் செய்தி கூறும். யமுனை, கங்கை, சரஸ்வதி, பிரமம-புத்திரா, சிந்து ஆகிய நதிகள் இங்கிருந்துதான் தோற்றமெடுக்கின்றன. இம்மலை இந்திய சமய வரலாற்றின் பிறப்பிடமாய் உள்ளது. இந்து சமயத்தின் ஒருங்கிணைந்த தன்மைக்கு இதுவும் காரணமாகும். இச் சமய ஒற்றுமை இத்துணைக் கண்டத்தின் ஒற்றுமைக்கு அடிப்படைக் காரணமாகும். ஆகவேதான் நாம் 'இமயம் முதல் குமரி வரை' என்று பெருமையுடன் கூறுகிறோம்.

# தமிழ்ச்சங்க வரலாறு

## —நூல் வெளியீடும் பாராட்டுக் கூட்டமும்

கடந்த ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை, தமிழ்ச்சங்க அரங்கில் மாநகரத் தமிழ்ப் பெருமக்கள், அறிஞர்கள், பொதுமக்கள் முன்னிலையில் இரண்டு பெரும் விழாக்-கள் நிகழ்ந்தன. புலவர். இளங்குமரன் எழுதிய 'நான்காம் தமிழ்ச்-சங்க வரலாறு' என்னும் நூல் வெளியீடு ஒரு நிகழ்ச்சி. 'குறுந்-தொகையில் தொல்காப்பியக் கொள்கைகள்' என்னும் தலைப்பில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றமைக்காக தமிழக வேளாண்துறை அமைச்சர் காளிமுத்து அவர்கட்குப் பாராட்டு விழா பிறிதோர் நிகழ்ச்சி. தஞ்சைத் தமிழ்ப்-பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர். வி.ஐ. சுப்பிரமணியம் தலைமையில் நிகழ்ந்த இவ்விழாவிற்கு வந்திருந்தோரை, சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் உயர்திரு மா. சங்கர பாண்டியன் வர-வேற்பு உரைத்தார்.

**விழாத் தலைவர் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் :**

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பாண்டிய மன்னர்களின் பரந்த நோக்கமே காரணம். மதுரை மாநகரில் சங்கத்தைத் தொடங்கி இருந்தாலும், சேர, சோழ நாட்டு மன்னர்களோடு ஒருங்கிணைந்த-தோடன்றி அவ்வப் பகுதியின் புலவர்களையும் ஆதரித்து அக்கால-மன்னர்கள் தமிழ் வளர்த்தனர். அதனையொட்டி 1901 - இல் பாண்டித்துரைத் தேவர் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் துவக்கிய போதும், பல்வேறு சமூகத்தைச் சார்ந்த தமிழ் அறிஞர்களைக் கொண்டே இலக்கண, இலக்கிய வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய்த் திகழ்ந்தார்.

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு சார்பில் அமைச்சர் காளிமுத்துவுக்கு உயர்திரு. என். எஸ். முத்துமலைச்சாமி பொன்னாடை போர்த்தி-னார். நூலாசிரியர் புலவர் இளங்குமரனுக்கு உயர்திரு. கே. கந்தசாமி பொன்னாடை அணிவித்தார். பொற்கிழியினை கே. எஸ். டி. இராசேந்திரன் வழங்கினார். உயர்திரு டி. பி. எம். பெரிய-சுவாமி மாண்புமிகு வேளாண்துறை அமைச்சருக்கு வாழ்த்து மடலை வாசித்தளித்தார்.

**பாராட்டுரை வழங்கியோர் :**

**திரு. பழனி. அரங்கசாமி :**

புலமைக்காய்ச்சலின்றி அறிவின் அடிப்படையில் புலவர்கள் குழுமி ஆய்வு செய்யும்போது கிடைக்கும் இன்பம், மறுமையிலும் கிடைக்காத ஒன்று. நான்காம் தமிழ்ச்சங்கம் அத்தகு விவாதங்கள் நடைபெற உதவியுள்ளது. உ.வே.சா., பண்டித மணி, ந. மு. வே. நாட்டார், மு. இராகவ அய்யங்கார் போன்ற ஆன்ற தமிழ்ப்புலவர் இத்தமிழ்ச்சங்கத்தின் வழி தொண்டாற்றியுள்ளனர். வளர்ந்து வரும் இத்தொண்டு மேலும் சிறக்கும் வண்ணம் சங்கத்தின் வரலாறு இப்போது வெளியிடப்படுகிறது. அரசியலில் ஈடுபட்டாலும், அறிவு வளர்ச்சிக்கும் நேரம் ஒதுக்கி ஆய்வு செய்து பட்டம் பெற்ற முதலாவது அமைச்சர் மாண்புமிகு. காளிமுத்து. அவர்களின் தமிழாய்வுப்பணி மேலும் தொடரவேண்டும்.

**திரு. தமிழ்க் குடிமகன் :**

ஆழ்ந்த புலமையும் நாவன்மையும் கொண்டவரான அமைச்சர் மாணவப் பருவத்திலேயே தமிழ் மொழியின்பால் ஈடுபாடு கொண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னணியில் நின்றவர்.

**திரு. ஆண்டித்தேவர் எம். எல்.ஏ :**

பசும்பொன் தேவராலேயே பாராட்டப் பெற்ற பெருமை அமைச்சர் காளிமுத்துவுக்கு உரியது.

**திரு. டி. கமலக் கண்ணன் :**

தமிழில் ஆங்கிலச் சொல் கலவாது எழுத முயற்சி செய்ய வேண்டும். தமிழில் படிப்பதற்கென்று உதவித் தொகை அளிப்பது பெருமை உடையதாகாது. நாமே விரும்பிப் பயில வேண்டும்.

**திரு. தீபம். நா. பார்த்தசாரதி :**

அமைச்சர் அவர்கட்கு உள்ள தமிழ்ப்புலமை பேச்சிலும், எழுத்திலும் தெளிவாகக் காணப்படுகிறது. குறுந்தொகையை ஆய்ந்தது போன்று புறநானூறு, நற்றிணை முதலிய சங்க நூல்களையும் ஆழ்ந்து பயின்று நூல்கள் வெளியிட வேண்டும். ஆய்வு நூல் எழுதி டாக்டர் பட்டம் பெற்றது பாராட்டுதற்குரியது.

தமிழ்ச்சங்க வரலாற்றுநூலை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. கே.மலைச்சாமி ஐ.ஏ.எஸ். அவர்கள் வெளியிட்டார். முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு பாராட்டுரை வழங்கியவர் தொழிலதிபர் கருமுத்து கண்ணன் அவர்கள்.

**திரு. கே. மலைச்சாமி :**

தமிழில் பட்டம் பெறுவது கணிதம், ரசாயனம் முதலிய பாடங்களில் பெறுவது போன்று எளிதல்ல. தமிழாசிரியர்கள் மதிப்பெண்களைத் தாராளமாக வழங்க மாட்டார்கள். மொழியின் தூய்மைக்கும், அறிவு நுண்மைக்கும் முதலிடம் கொடுப்பார்கள். இப்படியிருந்தும், ஆய்வு செய்து பட்டம் பெற்ற அமைச்சர் நமது பாராட்டுக்கு உரியவர். தமிழ்வளர்ச்சிக்காக ஏராளமான பொருளுதவி செய்தவர் பாண்டித்துரைத் தேவர். அவர் நிறுவிய தமிழ்ச்சங்கத்தின் வரலாற்றை புலவர் அவர்கள் சிறப்புறப் படைத்துள்ளார்கள்.

**திரு. கருமுத்து கண்ணன் :**

பொதுத்தொண்டிற்கும், அரசியல் அலுவலுக்கும் இடையில் தமிழ்ப்பணிக்கு நேரம் ஒதுக்கி ஆய்வுசெய்த அமைச்சர் எமது தந்தையார் தொடங்கிய தியாகராய கல்லூரியின் மாணவர். 1965 - இல் தமிழுக்கு இன்னல் நேர்ந்தபோது, தயங்காது போராட்டத்தில் குதித்த இளம் வீரராகத் திகழ்ந்தவர் இன்றைய அமைச்சர் காளிமுத்து. அவர் டாக்டர் பட்டம் பெற்றது அவரது அறிவுத்திறமையைக் காட்டுகிறது.

**மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து :**

(பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசியது) சங்க வரலாற்றில் இன்று ஒரு பொன்னாள். இன்று சங்கத்தின் வரலாறு வெளியிடப்படுகிறது. அவதியுற்ற தமிழ்ப் புலவர்களை மனமுவந்து ஆதரித்ததோடு, செல்லரித்துப்போன தமிழேடுகளைச் செப்பம் செய்து தமிழ்காத்த பெருமை பாண்டித்துரைத் தேவருக்கு உரியது. தமிழ்ச்சங்க வரலாற்றினை எழுதிய புலவருக்குப் பாராட்டுகள் உரியன. எந்நிலையிலும் இயன்ற வரையில் தமிழ்த் தொண்டினைக் கைவிடாது பணிபுரிவேன்.

**திரு. புலவர் இளங்குமரன் :**

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக முயன்று குறிப்புகளைச் சேர்த்து இந்நூலை எழுதியுள்ளேன். போட்டிக்காகவோ பரிசு பெறுவதற்காகவோ இன்றிப், பாரம்பரியம் மிக்க ஒரு தமிழ் நிறுவனத்தின் எளிய வரலாற்றுநூலாக இதனை ஏற்றருள வேண்டும்.

**தமிழ்ச் சங்கச்செயலர் திரு. டி'பி.எம். பெரிய சுவாமி :**

அறிஞர்களும், புலவர் பெருமக்களும் கூடி அமர்ந்து விழாவினைச் சிறப்பிக்க வந்தமைக்கு நன்றியும் வணக்கமும் உரியன. தொழிலதிபர் கருமுத்து, கண்ணன் அவர்கள் தமது அலுவல்களையும் பொருட்படுத்தாது நிகழ்ச்சிக்கு வந்தமைக்கு மகிழ்ச்சியும் நன்றியும். தமிழறிவைப் பெறுவதோடன்றி தமிழ் உணர்வையும் வளர்க்க வேண்டியது அவசியம்.

நாட்டு வாழ்த்துக்குப் பின் இருபெரு விழாக்களும் இனிதே நிறைவுற்றன.

# குயிலுக்கு அழைப்பு

**பழனி. அரங்கசாமி**
மதுரைப் பல்கலைக்கழகம்-

வசந்தம் வருகாலை வருகின்ற மகிழ்வே!
காலமெலாம் உந்தனிசைக் கண்மயங்கிக் கேட்கின்றேன்
காற்றூடு இழைந்துவரும் கனிந்த குரல் நீயோ?
அருங்குயிலே என்றுஉனை ஆர்வமோ டழைக்கவா?

பசும்புல்லின் தரைமீது படுத்திருக்கும் வேளையிலே
விசும்பினின் றிழிதரும் குக்கூக் குரலொன்று
சூழ்ந்திருக்கும் மலைகள்தொறும் சுற்றி எதிரொலித்து
ஆழ்ந்திருக்கும் மோனத்தை அள்ளிக்கொண் டேகுதன்றோ!

ஞாயிற்றின் பேரொளிக்கும் ஞாலத்தின் பூக்களுக்கும்
வேய்மலையில் எதிரொலிக்கும் வெற்றொலியாய்ப் பட்-
டாலும்
அந்தமே யிலாப்பெரிய ஆழ்கதையைக் காட்டியே
நின்றுஎந்தன் கவனத்தை நீயே திருப்புகின்றாய்!

மூவாத வசந்தத்தில் முகிழ்த்துவந்த செல்வியே!
வாய்குளிர மும்முறையும் வா! வா! வென் றழைக்கின்றேன்-
புரியாத புதிரோ! நீயுமொரு புதுமையின் குரலோ!
காணஇயலாத பொருள்! கருங்குயிற் பறவையில்லை!

பள்ளிச் சிறானாய்நின் துள்ளிவரும் இசைகேட்டேன்!
முட்செடியும் நீள்மரமும் முகில்தழுவும் வானமெங்கும்
கட்புலனால் தேடியும் காணவே இயன்றிலது
தித்திக்கும் தீஞ்சுவையைத் திகட்டாது தந்தவுனை!

வேறு

காடுகள் தாண்டிக் கழனிகள் போந்து
நாட்கள் நகர்ந்தன நானுனைத் தேடி!
கண்ணொளி தேயினும் கருத்தில் நிறைந்திடு
காதலின் உருவோ! கண்டிராப் புதிரோ!

விந்தைக்குர லென்செவியில் வீழ்ந்த படிஇருந்தால்
சிந்தை மறந்துநான் செயலற்றுக் கேட்டிடுவேன்
அந்தமே யானாலும் உந்தன்உருக் காணும்வரை
இந்தப்படி இருப்பேன் இதிலொன்றும் மாற்றமிலை!

வேறு

மானுடர் வதியும் மாபெரும் உலகம்
சாரமும் அற்றது சக்தியும் இற்றது
ஓ! அருளின் பிறப்பே! விர்ரென்று நீபறக்கும்
வியனுலகே உந்தனுக்கு விரும்பிவாழ் இடமேயாகும்!

---

இயற்கையை விதந்து பாடிய வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் (1770-1850) தின் The Cuckoo எனும் கவிதையின் தமிழாக்கம்.

# விவேகபோதினி இதழில் பாண்டித்துரையார் வரலாறு

தமிழ்ச்சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவர் வரலாறு நமது அன்பர்களுக்குப் புதியதுஅல்ல. இருப்பினும் திரு.வே. முத்துசாமி அய்யர் எழுதிய இக்கட்டுரையில் பாண்டித்துரைத்தேவர் பற்றிய பற்பல புதிய செய்திகள் கோவையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தேவர் அவர்கள் இயற்கை எய்திய சின்னாட்களுக்குள், அவர்களது நினைவாக 'விவேக போதினி' (1912 சூலை) இதழில் எழுபது ஆண்டுகளுக்கு முன் இக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. சென்னை சென்றிருந்தபோது ஆவணக்களரியில் எமது பார்வைக்கு வந்த இக்கட்டுரை 'விவேகபோதினி' இதழிற் கண்டவாறே இங்கு வெளியிடப்படுகிறது. இக்கட்டுரையேயன்றி, முழுப்பக்க அளவில் பாண்டித்துரைத்தேவரின் உருவப்படமும், அதே இதழில் அழகுற அச்சிடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது—ப-அ.

## ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் சரித்திரம் :

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழியானது ஆதரிப்போரின்றித் தளர்ச்சியடைந்திருக்கும் இக்காலத்தில், அதன் வளர்ச்சியையே பெருநோக்கமாகக் கொண்டு, அவ்வளர்ச்சிக்கேற்ற முயற்சிசெய்வதில் கண்ணும்கருத்துமாய் இருந்துவரும் தமிழ்ப்பாஷாபிமானிகள் மிகச் சிலரேயாகும். அவர்களுக்கெல்லாம் முதல்வராவார் சென்ற பத்து வருஷங்களாக மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாய் விளங்கி இப்போது காலஞ்சென்ற ஸ்ரீமாந். பொ. பாண்டித்துரைத்தேவர் அவர்கள் என்பது தமிழுலகம் முழுதும் அறிந்த விஷயம். அவரது பிரிவாற்றாது நூற்றுக்கணக்கான தமிழ்ப் புலவர்கள் உள்ளமுடைந்து, மிக உருக்கமுறப் பாடியுள்ள ஆயிரக்கணக்கான இரங்கற்பாக்களே (சரமகவிகள்) அவரது புலமைக்கும், பெருமைக்கும் போதிய அறிகுறியாகும். இப்பெரியாரைப் பற்றிய விவரங்களை நம் 'போதினி' நேசர்கள் படித்தறிந்து தமிழபிமானமுள்ளவர்கள் ஆதல் வேண்டி, சற்று விரிவாக அவரது வாழ்க்கைச் சரிதத்தைக் கீழே தருகின்றோம்.

நம் தேவரவர்கள் செந்தமிழ்ப் பாண்டி நாட்டிலே, இராமநாதபுரம் என்னும் ''பொன்னாடர் தொழுஞ்சேது நன்னாடு போந்தளிக்கப் போந்த'' சேதுபதிகளது மரபிலே தோன்றியவர். சேதுபதிகள் பரம்பரையாகவே தமிழ்ப்புலவர்களுக்குப் பெரும்பொருள் உதவி, அவர்களை யாதரித்து வந்த பெருந்தகையாளர்கள்.

இச்சேதுபதிகள் வம்சத்திலே, இப்போது அரசாண்டு வரும்-ஸ்ரீமான் இராஜேச சேதுபதி அவர்களுக்குப் பாட்டனாருடைய ஆட்சியில், அவரது சகோதரரும், அறிவு - ஆற்றல் முதலிவற்றிற் சிறந்தவரும் ஆகிய பொன்னுச்சாமித்தேவர் என்பார் இராமநாதபுரம் ஜமீன் மானேஜராயிருந்து வந்தார். இவர்கள்தாம், நம் பாண்டித்துரைத் தேவர் அவர்களது தந்தையார். இவர்களது மேற்பார்வையில் இராமநாதபுரம் ஜமீன் மிகச் சிறப்புற்றுச் செழித்தோங்கியது. இவர்கள் இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குச் செய்த நன்மைகளுக்குக் கைம்மாறாகப் பாலவனத்தம் என்றும் பட்டணம் இவர்களுக்குப் பரிசாக அளிக்கப்பெற்றது. அதுமுதல் இவர்கள் பாலவனத்தம் ஜமீன்தார் ஆயினார். இன்னும், இவர் உலகியலை நன்கு அறிந்திருந்ததுடன், எடுத்த கருமத்திற்கு எவ்வளவு இடையூறு வரினும், மனந்தளராது முயன்று, அதனை இனிது முடிக்கும் ஆற்றல் வாய்ந்திருந்தனர் அதுபற்றியன்றோ, இவர் அக்காலத்து மதுரை ஜில்லா போர்டுக்கு உப அக்கிராசனாதிபதியாய் இருந்து மதுரை ஜில்லா முழுவதற்கும் பல நன்மைகளைச் செய்தனர்.

பொன்னுச்சாமித் தேவர் அவர்களது, காரிய நிருவாக சக்தி இவ்வளவு சிறப்புடையதெனினும், அவர்களுடைய தமிழ்ப்புலமையும் தமிழபிமானமும், இதனினும் பல மடங்கு ஏற்றம் வாய்ந்தன. இவர் திருக்குறள் (பரிமேலழகருரையுடன்) திருக்கோவையார் (பேராசிரியர் உரையுடன்), தர்க்கசங்கிரகம், அன்னம்பட்டீயம், சேது புராணம் முதலிய நூல்களை, யாழ்ப்பாணத்து நல்லூர் மஹாவித்வான் ஆறுமுக நாவலர் அவர்களைக் கொண்டு, முதல் முதல் அச்சிற் பதிப்பித்தனர். அன்றியும் பற்பல சந்தர்ப்பங்களிற் பற்பல புலவர்கள் பாடிய தனிப்பாடல்களை ஒருங்குதிரட்டிச் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் அவர்கள் உதவியால் தனிப்பாடற் றிரட்டு என்னும் அரிய நூலை வெளியிட்டனர். மற்றும் இலக்கியம், இலக்கணம், சங்கீதம் முதலியவற்றில் தேர்ச்சியுள்ள பண்டிதர்களுக்கு மிக்க பொருளுதவி செய்து தமிழ் மொழியை ஆதரித்து வந்த அருங்-

குணமுள்ளவர்; திருவாவடுதுறை யாதீனத்து மஹாவித்வான் திரிசிர-புரம் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள், இவர்களது வள்ளன்மையைக் குறித்து வியந்து

''இலனென்னு மெவ்வ மெனுந்திருக் குறட்குப்
பலர்பல விதமாப் பகர்ந்தபே ருரையுள்
இரப்பவன் இரக்கப் படுவோ னாகச்
சுரக்குங் கொடையே சொல்லின் முதற்றால்;
அக்கொடை யிவன்பால் அனமந்த தியல்பென்
றெக்சொடை வள்ளலும் இயம்பப் பொலிவோன்''

எனப் பாடியிருப்பதனால் இவரது உதாரகுணம் எத்தகையது என்பது எல்லார்க்கும் எளிதில் இனிது விளங்கும்.

இத்தகைய செல்வச்சிறப்பும், கல்விச்சிறப்பும் வாய்ந்த பொன்-னுச்சாமித் தேவர்கட்குச், சற்றேறக்குறைய நாற்பத்தைந்து வருஷங்-களுக்கு முன், தமிழுலகம் மேனாளிற் செய்தவத்தின் விளைவாய் நம் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் மூன்றாம் புதல்வராகப் பிறந்தனர். குழந்தைப் பருவந்தொட்டே, நம் தேவரவர்கள் தமது (மறவர்) குலத்துக்குரிய வன்மை முதலிய மறக் குணங்கள் அமையப்-பெறாது அன்பு, அமைதி பொறுமை முதலிய 'சாத்விக' குணங்களே உடையவராய் விளங்கி வந்தனர். தந்தையாரது, வீரம், காரிய நிருவாக சக்தி இவற்றைப் பெரும்பாலும், முறையே இவர் அண்ணன்மார் இருவரும் கொள்ள, அவரது சாத்விக குணங்களை நம் தேவரவர்கள் கொண்டனர் என இம்மூன்று சகோதரர்களுடனும் நன்கு பழகியுள்ளவர்கள் கூறுவது வழக்கம்.

நம் தேவரது இளம்பிராயத்திலேயே, தந்தை பொன்னுசாமித் தேவர் சிவலோகம் சேர்ந்தனரேனும், இளமைந்தர் தம் கல்விக்குரிய ஏற்பாடு ஒன்றும் குறைவு பெறாது நடந்து வந்தது. தேவரவர்களும் இயற்கையிலேயே நுண்ணுணர் உடையராதலோடு, செவிவாயாக நெஞ்சுகளனாக கேட்டவை விடாதுளத் தமைத்து வந்ததனால் விரைவில் சிறந்த கல்விமானாய் விளங்கினார். இவர்க்குத் தமிழ் பயிற்றிய ஆசிரியர் அஷ்டாவதானம் முத்துசாமி ஐயங்கார் ஆவர். நம் தேவரவர்கள் சைவசித்தாந்த சாஸ்திரத்திலுள்ள நுணுக்கங்கள்

பலவற்றையும், சைவசமயநூற் புலமையிற் கைவந்தவரும், மிக்க நுண்ணறிவாளரும் ஆகிய திருவாவடுதுறை ஆதீனத்துப் பழநி குமாரசாமித் தம்பிரானவர்களிடம் கற்றுத்தேர்ந்தனர்.

இளம் பிராயத்திலேயே இவரது தமிழ்ப்படிப்பு மிகச் சிறந்திருந்தது என்பது இவர் பதினான்காம் வயதிலேயே, கம்பராமாயணத்திலுள்ள கருத்து விசேஷங்களை நயம்பட விரித்துரைத்துப் பிரசங்கம் செய்யும் ஆற்றல் அமைந்திருந்தனர் என்பதனால் எல்லாரும் எளிதில் அறிந்து கொள்ளலாம் இவ்விஷயத்தைக் குறித்தே மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும், மதுரைத்தமிழ்ச் சங்கப் புலவர்களுள் ஒருவரும், ஸ்ரீ பாண்டிதுரைத் தேவருடன் நீண்ட காலம் பழகியவரும் ஆகிய பிரம்மஸ்ரீ ம. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் தாம் தேவரவர்கள் மீதியற்றிய சரமகவியொன்றில்,

''இளமையிற்செந் தமிழ்சைவ சித்தாந்த
மாதியெலா மினிது தேர்ந்து
வளமைமிகு கம்பரா மாயண நுட்
பங்களெல்லாம் வயதீ ரேழில்
தெளிவுபெறப் பலர் மகிழப் பிரசங்கஞ்
செய்திடுநற் றிறமை வாய்ந்து
விளைபயிரி னியல்முளையில் விளங்குமெனு
முதுமொழியை மெய்ப்பித் தாயே''

என்று பாடியிருக்கிறார். பாண்டித்துரைத்தேவர் அவர்கள், பொன்னுசாமித்தேவர்க்கு மூன்றாவது புதல்வரென முன்னர்க் கூறினோம். தமையன்மார் இருவரும்அகால மரணத்திற்குள்ளாகவே, ஜமீன் பட்டத்துக்குப் பாத்தியதையும் நம் தேவரவர்கட்கே கிடைத்தது.

இவ்வாறு கல்விப் பொருளோடு செல்வப் பொருளும் சேரப் பெற்ற நம் தேவரவர்கள், பற்பல வழிகளில் தமிழ் மொழியை ஆதரிப்பாராயினர். தாமே ஆசிரியராய் இருந்து, தமதாசிரியரின் குமாரராகிய பிரமஸ்ரீ. மு. இராகவையங்கார்க்கும்,, பிறர்க்கும் தமிழ் பயிற்றினர். இந்த இராகவையங்கார் அவர்கள் மதுரைச் செந்தமிழ்ப்பத்திரிகையாசிரியராயிருந்துவந்ததுடன், இக்காலத்துப்பிரபல தமிழ் வித்வான்களுள் ஒருவராவர். தேவரது மற்ற மாணாக்கர்

களிற் சிலர், எட்டயபுரம் சமஸ்தான வித்வானாயும், பாலவனத்தம் அரண்மனை வித்வானும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியதரிசியும் ஆக இக்காலத்து விளங்குகின்றனர்.

இப்படித் தாமே தமிழ் பயிற்றி வந்ததுடன், தமிழ்ப் புலவர்களையும் சங்கீத வித்வான்களையும், சமஸ்கிருத பண்டிதர்களையும், பொருளுதவி செய்து ஆதரித்து வந்தனர். இங்கிலீஷ் படிக்கும் மாணாக்கரில், மதுரையிலுள்ள ஏழைப்பிள்ளைகள் பலர்க்குப் பள்ளிக்கூடச் சம்பளத்திற்காகவும், பரீட்சைக்குப் பணம் கட்டுவதற்காகவும் இவர் பொருளுதவி செய்துள்ளதை நாம் நேரில் பார்த்தறிந்திருக்கிறோம்.

இன்னும் இவர் பல நூல்களில் உள்ள சிறந்த விஷயங்களை யாவரும் எளிதில் உணரும் பொருட்டு, பன்னூற்றிரட்டு என்னும் அரிய தொகை நூலை வெளியிட்டுத் தமிழுலகுக்கும் பேருதவி புரிந்தனர். இந்நூல், இதிகாசம், புராணம், காவியம், நீதிநூல் முதலியவாகிய ஐம்பத்து மூன்று சிறந்த தமிழ்நூல்களினின்றும் தெரிந்தெடுக்கப்பட்ட 1647 செய்யுட்களை உடையது. மஹா மஹோபாத்யாயர் பிரம்ம ஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள் இந்நூற்கு நீண்டதோர் சிறப்புப் பாயிரம் பாடியிருப்பதனாலும், இதிலிருந்து சில பாகங்கள் மெட்ரிகுலேஷன், பி.ஏ, பரீட்சைகளுக்குப் பாடமாம் ஏற்பட்டிருக்கிறதனாலும், இந்நூலின் சிறப்பு இனிது விளங்கும். இதுபற்றியே

''இன்னூற் றிரட்டிதனுக் கேதுநிக ரின்றெனவே
பன்னூற் றிரட்டொன்று பாலித்தான் - நன்னூல்கட்கு
ஈண்டித் துரையே இடமெனயா வுந்தேர்ந்த
பாண்டித் துரையாம் பதி''

என இந்நூலையும் நூலாசிரியரையும் குறித்துச் சிறப்பாக பிம்மஸ்ரீ உ.வே.வை.மு. சடகோபராமாநுஜாசாரியர் அவர்கள் பாடியிருக்கிறார்கள்.

இவர், இவ்வளவு சிறப்பான 'பன்னூற்றிரட்டை வெளியிட்டதுமன்றித் தாமே, தாம் சைவசமயத்தின் மாட்டு வைத்துள்ள பற்றுக்கறிகுறியாக 'சிவஞான முனிவர் இரட்டை மணிமாலை'

என்னும் அரிய செய்யுள்நூலை இயற்றியிருக்கிறார். மதுரை வித்வான் இராமசாமிப் பிள்ளையவர்களைக் கொண்டு சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டையும் வெளியிட்டுள்ளார். மற்றும் மஹாமஹோபாத்யாயர் பிரமஸ்ரீ உ.வே. சாமிநாதையரவர்கள் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய தமிழ்மகள் அணிமேகலை போலும் மணிமேகலை என்னும் அரிய நூலையும், புறப்பொருள் வெண்பாமாலையையும் பதிப்பதற்கு இவரே பொருளுதவி செய்தனர்.

இவ்வளவு அரிய பெரிய காரியங்களெல்லாம் பெரும்பாலும் 1902 ஆம் வருஷத்தில் மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபனம் ஆவதற்கு முன்னமேயே, அதாவது அவரது முப்பத்தைந்தாம் வயதுக்கு முன்னரே நிகழ்ந்தனவாகும். இனி அச்சங்க ஸ்தாபன விஷயமாகச் சிறிது கூறுவோம்.

காலஞ் சென்ற இராமநாதபுரம் அரசராகிய ஸ்ரீமான் பாஸ்கர சேதுபதியவர்கள் நம் தேவரவர்கட்கு ஒரு முறையில் தம்பியாதல் வேண்டும். இவ்விரு சகோதரரும் ஒருவர் மீதொருவர் மிக்க பெருமதிப்பு வைத்திருந்தனர். பாஸ்கர சேதுபதியவர்களது தமிழபிமானமும் நாடறிந்த விஷயம். இவ்விருவரும், இக்காலத்திய தமிழின் நிலைமையைக் குறித்துச் சிந்தித்து,

பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த

தமிழ்க்குழந்தையானது சிறப்புடன் வளர வேண்டுமானால், முற்காலத்தில் தென்னவர்களாகிய பாண்டியர்களுடைய ஆதரவில் மூன்று தமிழ்ச்சங்கங்கள் நின்று நிலவியவாறு, இப்போது ஒரு சங்கம் இருக்க வேண்டுமென உணர்ந்து கொண்டனர். 'தண்டமிழ் இருந்திடிற் சங்கம் சேர்ந்திடும்' என்பது உண்மையன்றோ? அவ்வாறே இப்போதுள்ள சங்கத்தினை இருவரும் சேர்ந்து 1902 - ஆம் வருஷம் மதுரையில் ஸ்தாபித்தனர். சங்கத்தின் ஸ்தாபன விஷயமாக இவ்விருவரும் காட்டிய ஊக்கந்திற்கும் பட்ட சிரமந்திற்கும் அளவேயில்லை. இப்படிச் சங்கம் ஏற்பட்ட கொஞ்ச காலத்திற்குள், திடீரென்று சேதுபதியார் இளம் வயதில் (சுமார் 33 இருக்கலாம்) தேகவியோகம் அடைந்ததனால், தேவரவர்கட்கு வருத்தத்தை உண்டாக்கியது. தள தம்பியார் பிரிவாற்றாது, நம் தேவரவர்கள் மனங்கலங்கி இருந்த இருந்த நிலையில் பாடிய இரங்கற்பாக்களிலிருந்து ஒரு செய்யுளைக் கீழே வரைகின்றோம். அது ஒன்றே அவர்களது சகோதர வாஞ்சையையும் சாகித்ய சக்தியை நிலைநாட்டற்குப் போதும். அச் செய்யுள் வருமாறு :

என்னாவி யுளங்குளிர அண்ணா! என்
றன்பொடினி யெனையார் சொல்வார்?
மன்னா! மன்னா! மன்னா! என யாரை
யானினிமேல் மதித்துச் சொல்வேன்?

பொன்னாடர் தொழுஞ்சேது நன்னாடு
புரந்தளிக்கப் போந்த நீ வேறு
எந்நாடு சென்றனையோ? எங்கள் குல
மணிவிளக்கே! இயம்பிடியே.

சேதுபதியார் காலமானது முதல் தமிழ்ச் சங்கப் பொறுப்பு முழுதும், தேவரவர்களே பார்க்க வேண்டிதாயிற்று. சங்கத்தலைவராய்த் தாம் இருந்து கொண்டு, சங்கத்துக்கு நிதி தேடுவதிலும், பழைய ஏட்டுப் பிரதிகளைச் சேர்ப்பதிலும், அவற்றைப் பரிசோதிப்பதிலும், மாணாக்கர்கட்கு வேறுவேறு பரீட்சை வைத்துப் பரிசு அளிப்பதிலும், அச்சு எந்திரம் முதலிய சம்பாதித்து அரிய நூல்களை சங்கப் பிரசுரங்களாக வெளியிடுவதிலும், இவைபோன்ற பிற செயல்களிலும் மிக ஊக்கத்துடன் உழைத்து வந்தார்.

'மெய் வருத்தம் பாரார்; பசி நோக்கார்: கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்'

என்னும் நீதிநெறி விளக்கச் செய்யுளுக்கு இவர்களையோர் உதாரணமாகக் காட்டுவது பொருத்தமுடையதேயாகும்.

இத்துணை வேலைகளையும், தமது ஜமீன் சம்பந்தமான வேலைகளையும் இடையறாது மேற்பார்த்து வந்த நமது தேவரவர்கட்கு ஓய்வு நேரம் எப்படிக் கிடைக்குமோ, நமக்குத் தெரியாது. அடிக்கடி 'செந்தமிழ்' என்னும் தமது தமிழ்ச் சங்கப் பத்திரிகையின் கண்ணே நூலாராய்ச்சி விஷயமாகவும், சரித்திர விஷயமாகவும், பல அரிய விஷயங்களைக் குறித்து மிக நுட்பமான கருத்து நயம் வாய்க்க வியாசங்கள் வரைந்து வந்தார். இவர் இங்ஙனம் கம்பராமாயணச் செய்யுள் சிலவற்றிற்கு எழுதி விடுத்த விளக்கவுரையும், தமிழ்ப் பழஞ்சரிதம் எனும் விஷயமும் கற்றோர்னைவரும், காமுறற் பாலவாய்ச் சிறந்து விளங்குகின்றன.

அன்றியும் சங்கம் நிறுவுவதற்கு முன்னரே இவரால் வெளி-விடப்பட்ட பன்னூற்றிரட்டு என்னும் நூலை, இவர் நூற்றுக்கணக்-கான புதிய செய்யுட்களைச் சேர்த்துத் திருத்தமாக இரண்டாம் பதிப்புச் செய்து, சங்கப் பிரசுரமாக அதனை வெளியேற்றினர். சைவர்களுக்குப் பெரிதும் பயன்படுமாறு சைவசித்தாந்த நூல்கள் பலவற்றிலிருந்து, சிறந்த செய்யுட்களைத்தேர்ந்தெடுத்து சைவமஞ்சரி என்னும் பேரால் ஒரு தொகை நூல் வெளியிட்டனர். இங்ஙனமே, பல தோத்திரச் செய்யுட்களைத் திரட்டி, தோத்திரத் திரட்டு என்பதொன்றும் பதிப்பித்திருக்கிறார். இவரால் பதிப்பிக்கப்பட்ட இத்தொகை நூல்கள் மூன்றும் தமிழ் கற்போர்களுக்குப் பேருதவியா-யிருக்கின்றன.

இன்னும் இவர், வியாசம், செய்யுள் ஆகிய இவற்றை வரைவதில் மாத்திரம் வல்லமையுள்ள சிலர் போலாகாது, வித்வான்கள் பலர் கூடிய பெரிய சபையில், திருத்தமாக இனிய குரலுடன் நெடு நேரம், கேட்போர் மகிழும்படி பிரசங்கம் புரியும் ஆற்றல் வாய்ந்தவர். இவரது பிரசங்கங்கள், கற்பனை நயமும் சொற்பொருள் நயமும் கலந்து கேட்கக் கேட்கத் தெவிட்டாதிருக்கும். இவர் சைவசமய விஷயமாகவும், தமிழ்ப் பெருமை விஷயமாகவும், சென்னை, சேலம் தஞ்சை, நாகப்பட்டினம், சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களிற் பிரசங்கம் செய்திருக்கிறார். இவர்களது தமிழ்ப்பாஷாபி-மானம், இவ்வளவு சிறப்புடையதாகலின், அதை இதுவரையில் சற்று விரிவாகக் கூறினோம். மற்றைச் சிறப்புகளைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

இவர்கள் இக்காலத்தினியல்புக்கேற்ப ஆங்கிலமும் தெரிந்தவர்-ஆங்கில பாஷையினிடத்தும், ஆங்கில அரசாங்கத்தாரிடத்தும் மிக்க அபிமானமுடையவர். ஆங்கில ஆராய்ச்சி நூல்களின் போக்கைத் தழுவிக் காலஞ்சென்ற பிர்ம ஸ்ரீ வி. கோ. சூரிய நாராயண சாஸ்-திரியர் பி. ஏ. அவர்கள் இயற்றிய ''தமிழ் மொழியின் வரலாறு'' (The History of Tamil Literature) என்னும் அரிய நூலை, அரகேற்றுதற்குக் கூடிய சபையில், இவர்களே சபாநாயகராக விருந்து, அந்நூலைச்சிறப்புத்துக் கூறியவதனால், 'புதியன புகுதல்' பாஷை வளர்ச்சியுறுவதற்கு ஒரு காரணமாகும் என்பது இவர்க்கு உடன்பாடு எனல் வெளிப்படை.

இவர், சிறப்புப்பற்றித் தமிழ்க்கல்வியைப் பெரிதும் ஆதரித்து வந்தனரென்றாலும், பொதுக்கல்விபிடத்து இவர்க்கு அபிமானங் குறையவில்லை. ஆங்கிலம் படிக்கும் பல ஏழை மாணாக்கர்கட்கிவர் பொருளுதவி செய்து வந்தது முன்னரே கூறப்பட்டது. இராமநாத-புரத்தில், பாண்டியன் ஸகண்டரி வித்தியாசாலை (The Pandian Secondary School) ஒன்றேற்படுத்தி, அதற்கு வேண்டிய பொரு-ளுதவி முழுதும் தாமே புரிந்து வந்தனர். அது இரண்டொரு வருஷங்களில் ஒரு சிறந்த ஹைஸ்கூலாய் விடும் நிலைமையில் இருக்கிறது. இதுவன்றியும், மதுரைக் காலேஜுக்குப் பணம் கொடுத் திருப்பதனாலும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தைச் சேர்ந்திருக்கும் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலையில், மாணக்கர்கட்குத் தமிழுடன், ஆங்கிலம், வடமொழி முதலிய பயிற்றி வரவேண்டுமென்னுங் கொள்கை கொண்-டிருந்ததனாலும், இவர் பொதுவாகக் கல்வியிடத்து வைத்திருந்த அபிமானம் யாவராலும் எளிதில் இனிதுணரப்படும்.

நம் தமிழ் நாட்டில் பெரும்பாலும் செல்வமிக்கவர்கள் கல்வி யில்லாதவர்களாய் இருக்கிறார்கள். கல்வி மிக்கவர்கள் செல்வ-மில்லாமல் இருக்கிறார்கள். தொன்று தொட்டுத் தமிழ் நாட்டில் இப்படிக் கல்வியும், செல்வமும் ஒன்றோடொன்று முரண்பட்டு இருந்த தென்பது

இருவேறு உலகத்தியற்கை; திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு

என்னுந் திருக்குறளாலும், மற்றும் சில தமிழ்ப்பாக்களாலும் அறியப்-படும். இவ்வுலகத்தியற்கைக்கு மாறாக, மட்டற்ற கல்விப் பொருளும், செல்வப் பொருளும், கலந்துறைவதற்கு இடனாயிருந்தமையால், திருத்தக்க தேவர் சீவகசிந்தாமணியில் சச்சந்தனென்னும் அரசனைக் குறித்து,

நாவீற் றிருந்தபுல மாமக ளோடு நன்பொற்
பூவீற் றிருந்ததிரு மாமகள் புல்ல நாளும்
பாவீற் றிருந்தகலை பாராச் சென்ற கேள்விக்கோ

எனக்கூறியது, நம் பாண்டித்துரைத்தேவர் அவர்கட்கும் பெரிதும் பொருத்தமுடைத்து என்பது சொல்லாமலே அமையும்.

இவ்வளவு சிறப்புடைய ஒருவரைத் தமிழ்நாடு இழக்க நேர்ந்தது, தமிழர்தந் துர்ப்பாக்கியமேயன்றி வேறன்று. இவர் தலைமை பூண்டிருந்த தமிழ்ச்சங்கமும், இவரது சுவீகார புத்திரனது ஆக்குனும், இவர்க்குப் பின்னும், இனிதோங்குமாறு, இறைவன் திருவருள் சுரப்பானாக.

வே . முத்துஸாமி ஐயன்
பி. ஏ., எல். டி.,

---

**புதுவைக் கவிதை பற்றி**

செய்யுள் இலக்கணத்தையும் இலக்கியங்களையும் மனதில் நிறுத்தாத காரணியத்தால் பிறந்ததே தற்போதைய ‘புதுக்கவிதை யுகம்’. தமது கற்பனைகளைச் செய்யுள் வடிவில் தர இயலாத இன்றைய இளைய தலைமுறை எந்த வரையறைக்கும் அடங்காத வண்ணம் உரைநடையை செய்யுளாக்கி விலைநிலத்தில் காளான்-களை வளர்த்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

—‘நினைவுக்கலை’ இராமையா